Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 16 | விலை – 30 ரூபா    செய்தி : 021 493 0000    விளம்பரம் : 021 493 1111

சுடர் :35  கதிர் :167  சித்திரை 29 ஆம் நாள்  செவ்வாய்க்கிழமை  12 மே 2020  வள்ளுவர் ஆண்டு 2050

## சுமந்திரனின் கருத்துக்கு

# கூட்டமைப்புக்குள்ளேயே கிளம்பியது கடும் எதிர்ப்பு

### பேச்சாளர் பதவியை பிடுங்குமாறும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 12

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிங்கள ஊடகத்துக்குத் தெரிவித்த கருத்துத் தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மூவரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய தலைவர்களும் கண்டித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளனர். 02 ➤

## யாழ்ப்பாணத்தின் முதல் நோயாளி இன்னும் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதலாவதாக இனங்காணப்பட்ட கொரோனா நோயாளி ஐ.டி.எச். மருத்துவமனையில் இன்னும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய 02 ➤

## கல்விக்கான ஜனாதிபதி செயலணியில் இரு தமிழர்கள்

கொழும்பு, மே 12

இலங்கையின் கல்வி விவகாரங்களுக்கான ஜனாதிபதி செயலணியின் பொதுக் கல்விக்கான செயற்பாட்டுக் குழுவில் வடக்கைச் சேர்ந்த தமிழர்கள் இருவர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஜனாதிபதி செயலணியின் பொதுக் கல்விக்கான செயற்பாட்டுக் குழுவில் தமிழ் உறுப்பினர்களாக வடமாகாண கல்வி 02 ➤

## நல்லூரடியில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச்சந்தியில் நேற்று மதியம் நடத்தப்பட்ட வாள்வெட்டில் இருவர் காயமடைந்தனர். முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன சேதமாக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். 02 ➤

## புலிகளின் சீருடைகள் புதுக்குடியிருப்பில் மீட்பு

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைவேலியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அங்குள்ள காணி ஒன்றில் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் காணி உரிமையாளர் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பெட்டியை ஆராய்ந்தனர். அதற் 13 ➤

## மருத்துவபீட பி.சி.ஆர் சோதனை: வதந்தி பரப்பியோர் மீது முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம்பெற்று வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரிசோதனை செய்யும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்பில் வதந்திகளைப் பரப்பிய ஊடகங்கள் மற்றும் அதற்கு தூண்டுதலாக இருந்தோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் 13 ➤

## தனியாள் இடைவெளியில்லை:

## மந்திகையில் நேற்று மடக்கப்பட்டது பஸ்

தென்மராட்சி, மே 12

பேருந்தில் தனியாள் இடைவெளியைப் பின்பற்றாது அதிகளவில் பயணிகளை ஏற்றிச் சென்ற வேளை மந்திகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பேருந்தை மடக்கினர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் இடம் 02 ➤

## கொரோனா ஆய்வுகூடத்தருகே உள்ளோருக்கு மாற்று பணியிடம்

*யாழ். பல்கலை ஊழியர் சங்கம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், மே 12


யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அமைந்துள்ள கொரோனாத் தொற்று ஆய்வு கூடத்துக்கு அருகில் உள்ள துறைகளில் பணியாற்றுவோரின் பாதுகாப்புக்கு சர்வதேச ஆய்வு கூட நியம நடைமுறையின் படி மாற்றுப் பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஊழியர் சங்கம்.

இந்த விடயத்தில் மாற்று ஏற்பாடுகள் தேவைப்படாது எனினும், அச்சப்படுபவர்களுக்கு மாற்றுப் பணியிடங்கள் வழங்கப்படும் என்று மருத்துவபீடப் பீடாதிபதியும், சத்திர சிகிச்சை 02 ➤

## சட்டமா அதிபர் நீதிமன்று வர மறுப்பு

கொழும்பு, மே 12

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் 02 ➤



## 200 சாராயப்போத்தல்களுடன் புத்தூரில் சிக்கினார் ஒருவர்

யாழ்ப்பாணம், மே 12

காற்போத்தல் கொள்ளளவுடைய 200 சாராயப் போத்தல்கள் மற்றும் 2 கேஸ் பியர் ரின்கள் புத்தூர் வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது 02 ➤

## கொரோனா 863

கொழும்பு, மே 12

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 856 இலிருந்து 863 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 11.55 மணிக்கான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த அதிகரிப்பு பதிவு செய் 13 ➤

## வடமராட்சி கிழக்கில்

## இராணுவத்தால் தேடப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் சரண்!

யாழ்ப்பாணம், மே 12

வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் பகுதியில் இராணுவத்தினரைத் தாக்கினார் என்று கூறப்பட்டு இராணுவத்தினரால் தேடப்பட்டு வந்த நபர் தனது சட்டத்தரணி ஊடாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்னிலையாகியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் தைப்பொங்கல் தினத்தன்று இராணுவத்தினர் மீது அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ் 02 ➤

## கட்சிப் பிரதிநிதிகளுடன் இன்று தேர்தல் ஆணைக்குழு பேச்சு!

கொழும்பு, மே 12

பொதுத் தேர்தல் நடத்துவது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையே இன்று செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று நடக்கவுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த 02 ➤

## யாழ்ப்பாணத்தின்...

மூர்த்தி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களின் 16 பேர் முழுமையாகக் குணமடைந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சுவிஸ் மத போதகருடன் நேரடித் தொடர்பில் இருந்த தாவடியைச் சேர்ந்தவரே இன்னும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கின்றார். தற்போது தேறி வருகின்றார். விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார்.

ஊடரங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனா வைரஸ் தொற்று அபாயம் இன்னும் முழுமையான நீங்கிவிடவில்லை. எனவே, கொரோனா தொற்று தொடர்பான சுகாதார நடைமுறைகளை மக்கள் கைவிடாது தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் மருத்துவர் சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளமையால் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நோய்த்தொற்றுப் பரவாதவகையில் விழிப்பாக சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றன என்று மேலும் அவர் தெரிவித்தார். (த-20,105)

## நல்லூரடியில்...

ஊரடங்கு நேற்றுத் தளர்த்தப்பட்ட சில மணித்தியாலங்களில் இந்தச் சம்பவத்தை நடத்தியுள்ளது வாள்வெட்டுக்குழு.

இந்தக் குழு மதியம் 2 மணியளவில் 10 மோட்டார்சைக்கிள்களில் யாழ்ப்பாணம் புங்கன்குளம் வீதி வழியாக சென்றுள்ளதை பொது மக்கள் கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வாள்வெட்டில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விசாரணை நடக்கின்றது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (த-106)

## கூட்டமைப்புக்குள்...

சிங்கள ஊடகத்தில் மூன்று தினங்களுக்கு முன்னர் வெளியான பேட்டியொன்றில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், ஆயுத அமைப்பை எப்போதும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதால், புலிகளின் ஆயுத அமைப்பை ஏற்கவில்லை எனவும் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கே பல தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான, மாவை. சோ.சேனாதிராசா, த.சித்தார்த்தன். செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். வரலாறு அறியாமல் சுமந்திரன் கருத்துரைப்பதாகக் கூறியுள்ளனர். அத்துடன் கூட்டமைப்பின் நிலைப்பாடு அதுவல்ல எனவும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரன் நீக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

சுமந்திரனின் மேற்படி கருத்துக்கு கூட்டமைப்புக்குள் இருந்து மாத்திரமல்ல, தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் ஏனைய கட்சிகளிடமிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. ( இது குறித்த அரசியல் தலைவர்களினதும், அமைப்புகளினதும் கருத்துக்கள் விரிவாக உள்ளே) (ஒ.5)

## மந்திகையில்...

பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சிகிழக்கு நோக்கிப் பயணித்த அரச பேருந்திலேயே சமூக ஆள்களுக்கிடையிலான இடைவெளி பின்பற்றப்படாது, அதிகளவில் பயணிகளை ஏற்றியவாறு பேருந்து சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவல் கிடைத்ததும் பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மந்திகையில் பேருந்தை மடக்கினர்.

சாரதி மற்றும் நடத்துநருக்கு அறிவுறுத்தல் வழங்கி மேலதிக பயணிகளை பேருந்திலிருந்து இறக்கிவிட்டனர்.

பின்னர் இ.போ.சவின் பருத்தித்துறை சாலை முகாமைமைப் பிரிவுக்கு அறிவித்து பிறிதொரு பேருந்தை அனுப்புமாறுகூறி பேருந்து வரவழைக்கப்பட்டு அந்தப் பேருந்திலேயே பயணிகள் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இனிவரும் நாள்களில் இ.போ.ச. பேருந்துகள் அல்லது தனியார் பேருந்துகள் ஆள்களுக்கிடையிலான இடைவெளியைப் பேணாது பயணிகளை அதிகளவில் ஏற்றிச் சென்றால், நோய்த்தடுப்பு தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்காக சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (த-9)

## 200...

செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்று மதியம் அங்கு நடத்திய திடீர் சோதனையில் அவை மீட்கப்பட்டன. ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த 46 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டார். சட்டநடவடிக்கைக்காக அவர் சான்றுப்பொருள்களுடன் அச்சுவேலி பொலிஸில் பாரப்படுத்தப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

## சட்டமா...

மனுக்கள் தொடர்பில் தாம் முன்னிலையாகும் நிலைப்பாட்டில் இல்லை என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் இணைப்பாளர் நிஷாரா ஜயரத்ன இதனை உயர்நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

தேர்தல் தினம் தொடர்பான மனுக்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு சார்பிலோ அல்லது அதன் உறுப்பினர்கள் சார்பிலோ முன்னிலையாகும் நிலைப்பாட்டில் தாம் இல்லை என்று சட்டமா அதிபர் தெரிவித்தார் என்று சட்டமா அதிபரின் இணைப்பாளர் மேலும் கூறினார். (எ-22)

## கட்சிப்...

பொதுத் தேர்தல், நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது. தற்போது பொதுத் தேர்தல் ஜுன் மாதம் 20ஆம் திகதி நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலை ஜுன் மாதம் 20ஆம் திகதி நடத்துவது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகார மட்டத்திலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றது. இன்றும் அவ்வாறான கலந்துரையாடல் ஒன்றை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளது.

இந்தச் சந்திப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு நடக்கவுள்ளது. இந்தச் சந்திப்புக்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போதும் நாட்டில் கொரோனா தொற்றுக் காணப்படும் நிலையில் பொதுத் தேர்தல் நடத்தும் சூழல் உள்ளதா என்பது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிகின்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ள எதிர்க்கட்சிகள், தற்போதுள்ள சூழலில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டாம் என்றும், மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அனைத்துக் கட்சிகளுக்கும் சமமான தேர்தல் பரப்புரைச் சூழல் உருவாக்கப்பட்ட பின்னர் தேர்தலை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தவுள்ளன என்று தெரிகின்றது.

அரசு நிவாரணம் என்று தெரிவித்துத் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுகின்றது என்ற முறைப்பாட்டையும் அவை இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கும் என்றும் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் பொதுத் தேர்தலுக்கான திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுத்து அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

## இராணுவத்தால்...

தரான ஐங்கரன் என்பவரது சகோதரர்களும், வேறு சிலரும் படையினரால் கைது செய்யப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கில் ஐங்கரன் தொடர்புபட்டிருக்கவில்லை எனினும், இராணுவத்தினரால் அவர் தேடப்பட்டு வந்தார்.

சில தினங்களுக்கு முன்னர் அவரது வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் சிலர் ஐங்கரனை விசாரித்து வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும், வீட்டில் இருந்த பொருள்களையும் அவர்கள் சேதப்படுத்தினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தநிலையில் ஐங்கரன் நேற்றுத் தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியுள்ளார். இவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், நாளை (இன்று) நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## கல்விக்கான...

அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும், கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளரான பி.என்.சுதர்சனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் ஆரம்ப மற்றும் இரண்டாம், மூன்றாம் கல்வி துறைகளை காலத்தின் தேவைக்கேற்ப நவீனமயமாக்குவது அவசியமென இனங்காணப்பட்டுள்ளதாலும் நாட்டை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனாத் தொற்று காரணமாக கல்வித்துறைக்கு எந்தவிதத்திலும் தடையேற்படாதவாறும் தொடர்ந்து முன்னோக்கிக்கொண்டுசெல்லும் திறன்முறைகளை காலத்துக்குக் காலம் வகுத்து கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## கொரோனா ஆய்வு...

நிபுணருமான எஸ்.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ள துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாற்றுப் பணியிடங்கள் வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக மருத்துவபீட பணியாளர்களுக்கான கலந்துரையாடலிலும் பிரதானவளாக நிர்வாகப் பகுதி பணியாளர்களுடான கலந்துரையாடலிலும் மருத்துவபீடாதிபதி வழங்கிய உறுதிப்படி சில பணியாளர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பணியாளர்களின் வரவை உறுதிப்படுத்துதல் உட்பட நிர்வாக நடைமுறைகளை மாற்றுப் பணியிடங்களிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவபீடாதிபதியும் சத்திர சிகிச்சை நிபுணருமான எஸ்.ரவிராஜிடம் கேட்டபோது, மருத்துவபீடத்தில் இடம்பெறும் கொரோனா பரிசோதனை நடைமுறைகள் குறித்து தேவையற்ற விதத்தில் அச்சமடைய வேண்டியதில்லை எனவும் பரிந்துரைக்கப்பட்ட ஆய்வு கூட நடைமுறைகளின் படியே சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச ஆய்வுகூட நியம நடைமுறைகளின் படி இலங்கையில் நுண்ணுயிரியல் சிகிச்சை நிபுணர்களைக் கொண்ட நுண்ணுயிரியல் கல்லூரியும், பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் திருமதி வசந்தி தேவநேசமும் இணைந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் ஆய்வுகூடத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய வழிகாட்டல்களுக்கு அமைவாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனா பரிசோதனைக் கூடம் இயங்குகின்றது.

ஆய்வுகூடத்தினுள் பணியாற்றுபவர்கள் பாதுகாப்பான நடைமுறைகளையே பின்பற்றுகின்றார்கள். அது தவிர அதைச் சூழ அமைந்துள்ள ஏனைய துறைகள் ஆய்வுகூடத்திலிருந்து வழிகாட்டுதலில் குறிப்பிட்டுள்ள தூரத்துக்கு (25 அடி) அப்பாலே அமைந்துள்ளன.

எனினும் நடைமுறை அச்சம் கொண்ட பணியாளர்கள் மாற்று ஒழுங்குகளுக்கு, அமைய பணியாற்றுவதற்கு மருத்துவபீடாதிபதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டு அவர்களுக்கு சட்டமருத்துவ துறையோடு மாற்றுப் பணியிடம் ஒழுங்கபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எந்தவொரு போதனை சாராப் பணியாளரும் மாற்று இடத்தில் பணி செய்ய அனுமதிக்குமாறு மருத்துவ பீடாதிபதியிடம் கோரவில்லை.

இது தொடர்பில் மருத்துவபீட நுண்ணுயிரியல் துறையிலிருந்து விரிவுரையாளர் ஒருவர் மாற்றுப் பணியிடம் ஒழுங்கமைக்குமாறு மின்னஞ்சல் ஊடாகக் கோரியதற்கு அமைவாக மருத்துவபீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஊடாக மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடைமுறையே போதனை சாரா ஊழியர்களுக்கும் எதுவித பேதமும் இன்றி நடைமுறைப்படுத்தப்படும்.

மருத்துவபீடத்தில் இடம்பெறும் கொரோனா பரிசோதனை நடைமுறைகள் குறித்து தேவையற்ற விதத்தில் அச்சமடைய வேண்டியதில்லை. பரிந்துரைக்கப்பட்ட ஆய்வு கூட நடைமுறைகளின் படியே சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன- என்றார். (எ)

# பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் சுமந்திரனுக்கு எதிராக நடவடிக்கை

## கூட்டமைப்பின் தலைமையிடம் ஸ்ரீநேசன் வலியுறுத்து

கொழும்பு, மே 12

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற பதவிக்குரிய குணாதிசயங்களை உதறித் தள்ளிவிட்டுப் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருகின்றார் எம்.ஏ.சுமந்திரன். இவர் தனது கருத்துக்களினால் சிங்களப் பேரினவாதிகளை உஷார்படுத்தி வருகின்றார். இவருக்கு எதிராக கூட்டமைப்பின் தலைமை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சிங்கள மொழியில் சுமந்திரன் வழங்கியுள்ள செவ்வியொன்றில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டத்தை வன்முறைப் போராட்டமாகச் சித்தரித்து அதனை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று தெரிவித்துள்ளார். அவரின் இந்தப் பொறுப்பற்ற கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் மத்தியில் பல உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்த் தேசிய ஆயுதப் போராட்டம் விளையாட்டுப் போராட்டம் அல்ல. இது சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிரான போராட்டம். தமிழர்கள் மீதான திட்டமிட்ட கல்வித் தரப்படுத்தல், மொழிப் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டம். தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான போராட்டம். இதைச் சுமந்திரன் அறியாமல் இருக்கமாட்டார்.

ஆரம்பத்தில் தமிழர்கள் உரிமைகளைக் கேட்டு அஹிம்சை வழியில் தான் போராடினார்கள். அந்தப் போராட்டத்தை சிங்களப் பேரினவாதிகள் அடக்க முற்பட்டபோதுதான் எமது தமிழ் இளைஞர்கள் தமது கைகளில் ஆயுதங்களை ஏந்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டனர். ஆயுதப் போராட்டம் சிங்களப் பேரினவாதிகளினால் தமிழர்கள் மீது வலிந்து திணிக்கப் பட் டதாகும். இதையும் சுமந்திரன் அறியாமல் இருக்கமாட்டார்.

கடந்த காலங்களிலும் பல தருணங்களில் தமிழர்களின் நிலைப்பாடுகளுக்கு எதிராக சுமந்திரன் பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். கட்சிக் கூட்டங்களில் இதனைப் பல தடவைகள் தலைமையிடம் எடுத்துரைந்திருந்தோம். எனினும், இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை-என்றார்.

(எ-22)

---

# சலூன்கள் நாளை திறக்கும்?

தென்மராட்சிப் பிரதேச சிகை அலங்கரிப்பு நிலையங்கள், முக அழகக நிலையங்கள் போன்றவை சுகாதார மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் பெரும்பாலும் நாளை புதன்கிழமையே திறக்க வாய்ப்புள்ளது என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். மருத்துவ பரிசோதனை அறிக்கை பெறவேண்டியநிலை காணப்படுவதால்தான் இந்தத் தாமதம் என்றும் தெரிவித்தனர்.

(த-9)

---

# முதியோருக்கும் 5,000 ரூபாதானா

## சமூகசேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் சேர்த்தே 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்று சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு கால இடர் காரணமாக முதியவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. ஆனால் முதியவர்களுக்கும், சிறப்புத் தேவையுடையவர்களுக்கும் ஏற்கனவே 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. "இடர்காலக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அரசு கூறியது. அதன்படி தமக்கு 7 ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். ஆனால் 5 ஆயிரம் ரூபாவே வழங்கப்படுகின்றது" என்று முதியோர் பலர் முறையிடுகின்றனர்.

இது பற்றிக் கேட்டபோதே சமூகசேவைகள் திணைக்களம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே அவர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தது.

(த-9)

---



# சுமந்திரன் தெரிவித்த கருத்தால் முன்னாள் போராளிகள் சீற்றம்!

## கூட்டமைப்புக்கான ஆதரவை மீளப் பெறுவோம் என எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ச்சியாக கொச்சைப்படுத்தும் சுமந்திரனின் பேச்சுக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான எங்களுடைய ஆதரவை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கு இட்டுச் செல்லும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச ரீதியிலான ஆதரவு செயற்பாட்டாளர்களான முன்னாள் போராளிகள் தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று மாலை இந்த முன்னாள் போராளிகள் குழு மாவை சேனாதிராசாவை அவருடைய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது. அதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசத்க் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தமிழின விடுதலைப் போராட்டத்தினை தொடர்ச்சியாக கொச்சைப்படுத்தும் விதமாக கருத்து தெரிவிப்பது தொடர்பில் தமிழரசுக்கட்சி நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்லும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த மாவை சேனாதிராசா, சுமந்திரனின் கருத்தைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அது கட்சியின் நிலைப்பாடு இல்லை எனத் தெரிவித்ததோடு இது தொடர்பில் கட்சியினரோடு கலந்துரையாடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

(எ)

வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
Door to Door Delivery

சுகாதாரமாக தயாரிக்கப்பட்ட அறுசுவை உணவுகள்
Hygienically Made tasty Food
ஒடியல் கூழ் முதல் புரியாணி, பிறைட் றைஸ், யாழ். மதிய இரவு நேர உணவுகள்
கொத்துரொட்டி, புட்டு இடியப்பம், அப்பம், பராட்டா என பலவகை.
VISA MasterCard AMERICAN EXPRESS UnionPay


077 734 0026
021 222 6868
Virounthu @ Yarl pardy
யாழ்பாடி
49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.

# பிதிர்க்கடன் செலுத்தவிடாது பொலிஸார் பெரும் இடையூறு

யாழ்ப்பாணம், மே 12

**ஊரடங்குவேளையில்கூட கீரிமலையில் பிதிர்க் கடன் செலுத்தப்பட்ட நிலையில், ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேற்று பிதிர்க்கடன் செலுத்த அனுமதி மறுக்கப்பட்டு அர்ச்சகர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் அங்கு குழப்பம் நிலவியது.**

இறந்தவர்களின் பிதிர்க்கடனைத் தீர்ப்பதற்காக புனித தீர்த்தக்கரையான கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்தி, அதற்குரிய பூசை நடைபெறுவது வழமை.

ஊரடங்கு காலத்திலும் ஒருவர் கடமைசெய்ய மூவர் வீதம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். எவருக்கும் இடையூறு இன்றி பிதிர்க்கடன் செலுத்தப்பட்டுவந்தது.

இந்தநிலையிலேயே நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் பிதிர்க்கடன் செய்ய அனுமதிக்க முடியாது என்றுகூறியவாறு சிவில் உடையில் அங்குவந்த பொலிஸார் பிதிர்க்கடன் செலுத்தவந்தவர்களை விரட்டி பூசை அறைகளை மூடியுள்ளனர்.

அதனால் இந்த விடயம் காங்கேசன்துறைப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்குவந்த பொலிஸார் நிலைமையை ஆராய்ந்தனர். அதிக கூட்டம் இல்லாது பிதிர்க்கடன் செலுத்த அனுமதி வழங்கினர். அதன்பின்னர் நிலைமை சுமுகமாகியது. (த-105)



## வவுனியாவில் நேற்று வழமையான செயற்பாடுகள்

வவுனியா, மே 12

கொவிட் 19 தாக்கம் காரணமாக நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்ட நிலையில் வவுனியா நகரில் மக்கள் தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியாவிலுள்ள அரச திணைக்களங்களில் ஊழியர்கள் கடமைக்குத் திரும்பியிருந்தனர். மக்களும் தமது தேவைகளை நிறைவுசெய்வதற்காக அரச திணைக்களங்களை நோக்கி வருகை தந்திருந்தனர். குறிப்பாக முதியோர்கள் தமது கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக தபால் நிலையங்களில் வரிசையில் நின்று சேவைகளைப் பெற்றிருந்தனர். வங்கிகளுக்கும் அதிகளவான மக்கள் வருகைதந்திருந்தனர்.

இதேவேளை, பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வாயிலில் கைகளைக் கழுவிச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வவுனியா மொத்த வியாபார மரக்கறிச் சந்தையின் செயற்பாடுகள் வழமைபோல இடம்பெற்றன. ஏற்கனவே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட இடங்களிலும் மரக்கறி விற்பனைகள் இடம்பெற்றிருந்தன.

இலங்கை பேருந்து சேவையின் வவுனியா சாலையில் உள்ளூர் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. மன்னார், முல்லைத்தீவு, யாழ்பாணம் போன்ற மாவட்டங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரம் இடம்பெற்றிருந்தன. இதேவேளை, நகரில் அமைந்துள்ள புடைவை வியாபார நிலையங்கள் மற்றும் சலூன்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. (த-110)

## கொடுப்பனவுகள் பற்றிய சுற்றறிக்கை வெளியீடு

ஏழாலை, மே 12

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தினூடாக சமுர்த்தி நலனுதவிபெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமூக பாதுகாப்பு உரித்துக்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த மார்ச் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சமுர்த்தி நலனுதவி பெறுகின்ற குடும்பத்தில் நடைபெறும் திருமணத்தின் பொருட்டு வழங்கப்பட்ட 7ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு 10 ஆயிரமாகவும், குழந்தைப் பிறப்பின் பொருட்டு வழங்கப்பட்ட 7ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு 10ஆயிரம் ரூபாவாகவும், நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்ட 250 ரூபா கொடுப்பனவு 350 ரூபாவாகவும், இறப்பின்போது வழங்கப்பட்ட 15ஆயிரம் ரூபா கொடுப்பனவு 20ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

சமுர்த்தி நிவாரணத் தொகையில் தலா ஒவ்வொரு பயனாளிகளிடமிருந்தும் 100ரூபா மாதாந்தம் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்கப்படும். அடிப்படையில் ஒரு குடும்பம் சமுர்த்தி நிவாரண முத்திரை பெறும் காலம் மட்டும் சமூக பாதுகாப்பு உரித்து நடைமுறையில் இருக்கும். இதேவேளை, நிவாரணம்பெறும் காலத்தில் சட்டரீதியான திருமணத்துக்கான உரித்து, மூன்றுக்குட்பட்ட குழந்தைகளின் பிறப்புக்கான உரித்து, குடும்ப அங்கத்தவர் யாராகினும் மருத்துவமனையில் 5 நாள்களுக்கு மேல் தங்கியிருந்து சிகிச்சைபெறின் ஆகக்கூடியது 30 நாள்களுக்குரிய கொடுப்பனவு உரித்து, சமுர்த்திக் குடும்பத்தின் சகல அங்கத்தவர்கள் மற்றும் பயனாளிகளின் தாய், தந்தையரின் இறப்புக் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

சமுர்த்தி குடும்பங்களில் ஒரே சூலில் பிறக்கின்ற இரட்டைக் குழந்தைகளுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பிரசவிக்கின்ற குடும்பங்களுக்கு பிள்ளைகளின் பிறப்புக்காக 10ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒரு வருடத்துக்கான பராமரிப்புச் செலவாக மேலதிக கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படுகின்றது. தலா ஒவ்வொரு பிள்ளைக்கும் பராமரிப்பு செலவுக்கு ஒருவருடத்துக்கு மாதாந்தம் 10ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. (த-29)



## ஊருக்குள் நுழைந்த முதலையை காட்டிக் கொடுத்தது நாய்

மன்னார், மே 12

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆக்காட்டிவெளி கிராமத்தில் வீட்டு வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த முதலையை நாய் காட்டிக்கொடுத்தது. அந்த முதலையை சிரமத்தின் மத்தியில் ஊரவர்கள் பிடித்துக் கட்டினர். அன்றையதினம் இரவு 11.30 மணியளவில் அந்த முதலை வந்துள்ளது. அங்கு கட்டப்பட்டிருந்த மாட்டை உணவாக்கும் நோக்கில் அது வந்திருக்கலாம் என்று அங்குள்ளவர்கள் கருதுகின்றனர்.

சுமார் 6 அடி நீளம் கொண்டதாக அந்த முதலை உள்ளது. அந்த வீட்டு நாய் நீண்டநேரமாக குரைத்துக்கொண்டிருந்ததால் வீட்டுக்காரர் எழுந்துசென்றுபார்த்தபோதே முதலையைக் கண்டார். இது பற்றி பொலிஸார் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை அகற்றுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

## நினைவேந்தல் வாரத்தை நிறுத்திய கொரோனா

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 'இனப்படுகொலை வாரம்' கொரோனா கிருமித் தொற்றுக் காரணமாக இந்தமுறை கடைப்பிடிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் முள்ளிவாய்க்கால் நினைவுநாளான மே 18 அன்றே நினைவேந்தல் நடைபெறும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

2009 ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதில் கொல்லப்பட்ட மக்களையும் போர்க் காலங்களில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களையும் நினைவுகூரும் வகையில் மே 12ஆம் திகதியில் இருந்து 18 வரை வடக்கு, கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் இனப்படுகொலை வார நினைவேந்தல்களை முன்னெடுத்து வருகின்றேன்.

இந்தமுறை கொரோனா வைரஸ், இலங்கையையும் தாக்கியதால் நாடு முடங்கியுள்ளது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், மாவட்டம் விட்டு மாவட்டம் தாண்டமுடியாது. எனவே இந்த இடர்நிலையைக் கருத்திற்கொண்டு, இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இறுதி மே 18 திட்டமிட்டபடி நினைவேந்தல் இடம்பெறும். அன்றைய தினம் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை தமிழர் தாயகம் எங்கும் நினைவேந்துவோம்- என்றார். (த-20)

## கோப்பாய் செயலர் பிரிவில் 1,762 பேருக்கு ரூ5,000

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் மாவட்டம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வாழும் 23 ஆயிரத்து 39 குடும்பங்களில் ஆயிரத்து 762 குடும்பங்களுக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதாக பிரதேச செயலகத் தரப்புத் தெரிவித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவாக கோப்பாயில் 23 ஆயிரத்து 39 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் 3 ஆயிரத்து 45 குடும்பங்கள் அரச அலுவலர்கள் குடும்பங்கள். ஆயிரத்து 573 குடும்பங்கள் ஓய்வூதியம் பெறும் குடும்பங்கள். இவர்கள்போக எஞ்சிய 18 ஆயிரத்து 421 குடும்பங்களில் வறுமையான ஆயிரத்து 762 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

சமுர்த்தி உதவிபெறும் 9 ஆயிரத்து 400 குடும்பங்களுக்கும், சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலின்கீழ் 286 குடும்பங்களுக்கும், சிறுநீரக பாதிப்பாளர்கள் 80 குடும்பங்களுக்கும் விசேட தேவையுடைய ஆயிரத்து 117 குடும்பங்களுக்கும் 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டோர் என 7 ஆயிரத்து 76 குடும்பங்களுக்கும் 70 வயதுக்கு மேற்பட்டோர் 3 ஆயிரத்து 138 பேருக்குமாக 21ஆயிரத்து 97 பேருக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரம் ரூபா பெறாதவர்கள் என 451 குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இந்தக் குடும்பங்களின் அங்கத்தவர்கள் வெளிநாட்டிலிருப்பவர்கள் அல்லது வர்த்தகர்கள் அல்லது செல்வந்தர்களாக உள்ளவர்கள். ஒரு சிலர் மட்டும் இந்தப் பகுதியில் பதிவு உள்ளபோதும் பிரதேசத்தில் வாழாதவர்களாகவும் உள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய குடும்பங்களே 451 குடும்பங்களாகும். (த-105)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திட்டமிட்ட புலிநீக்க அரசியல்

ஒரு நரியொன்று , தெரியாத்தனமாக நெசவாளர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து விட்டது. அங்கு பல வர்ணச்சாயங்கள் குடங்களில் கரைத்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நரி, தவறுதலாக அவற்றின் மீது விழுந்துவிட்டது. அவ்வளவுதான், நரியின் உடலெங்கும் வர்ணச் சாயங்கள் ஊறிவிட்டன. இப்போது அதனைப் பார்த்தால் யாரும் நரியென்று சொல்லமுடியாதளவுக்கு அதன் தோற்றமே அடியோடு மாறிவிட்டது.

“இந்தச் சாயத்தை எப்படிப் போக்குவது ?” என்று யோசித்தபடி காட்டுக்குத் திரும்பி வந்த நரியைப் பார்த்து, ஏனைய விலங்குகள் தலைதெறிக்க ஓடத் தொடங்கின. இப்படி ஒரு விலங்கை அவை முன்னர் பார்த்திராததால், ஏதோ பொல்லாத விலங்கொன்று நுழைந்துவிட்டதாகப் பயந்தன. அந்தப் பயத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட நரி, “இந்தக் காட்டை ஆளவே கடவுள் என்னை அனுப்பினார்” என்று கூறி, அந்தக் காட்டுக்கே ராஜா போல நடந்து கொண்டது. ஏனைய விலங்குகளும் அதற்குப் பயந்து , அடிமைகள் போல நடக்கத் தொடங்கின. அதற்குப் பிறகு நரிக்கு சுக்கிரதிசைதான். அது நினைத்ததெல்லாம் நடத்திக் காட்டுவேன் என்பது போல கதையளந்தபடி காலத்தை ஓட்டியது. அதைக் காட்டு விலங்குகளும் நம்பின.

ஒருநாள், திடீரென காட்டில் அடைமழை. நரிக்கு மழையைக் கண்டதும் இருப்புக்கொள்ளவில்லை. ஓடிப்போய் மழையில் நனைந்தபடி, சந்தோஷ மிகுதியில் தன்னை மறந்து ஊளையிடத் தொடங்கியது. அந்த ஊளைச் சத்தம் கேட்டபோதுதான் இத்தனை நாளும் நரிதான் இப்படி வர்ணம் பூசி தங்களை ஏமாற்றியதை அறிந்தன காட்டு விலங்குகள். அவை எல்லாம் ஒன்று சேர்ந்து நரியை அங்கிருந்து அடித்து விரட்டின.

சிறுவயதில் கேட்டறிந்த இந்தப் பஞ்சதந்திரக் கதையில் வரும் நரியைப் போலவே சிலர் தங்கள் வாயாலேயே கெடுவதை ஒரு தொழிலாகவே வைத்திருக்கிறார்கள். அதில் முக்கியமானவர் கூட்டமைப்பின் பேச்சாளர் என்று சொல்லப்படும் சுமந்திரன். சட்ட விவகாரங்களில் அவர் நிபுணர் தான். ஆனால் அவருக்குச் சற்றும் பொருந்தாத அரசியல்களத்தில் பித்துக்குளித்தனமான கருத்துக்களைச் சொல்வதிலும் அவரை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது. அதிலும் விடுதலைப்புலிகள் விடயத்தில் , அவர் தாறுமாறாக வாயைவிட்டு பலமுறை வாங்கிக் கட்டியுமுள்ளார். சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது. ஆனாலும் அந்தப் பழமொழி சுமந்திரனுக்கு அடிக்கடி மறந்து போய்விடுவதால், மீண்டும் பழையபடி விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளத்தைப் போல, புலிகள் என்றதுமே சர்ச்சையான ஒரு கருத்தைச் சொல்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால், இப்படி புலிகளையும், போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் கருத்தைச் சுமந்திரன் சொல்வது தற்செயலானதாகவே தோன்றும். ஆனால் அது மிகத் திட்டமிட்ட புலிநீக்கல் அரசியல் தந்திரமே. அதாவது புலிகளைக் கொச்சைப் படுத்திவிட்டு, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று தன்னால் நாடாளுமன்றுக்குச் செல்லமுடியும் என்ற செய்தியை அவர் உலகை நம்பவைக்க முனைகிறார். புலிகளையும் அவர்களின் கொள்கைகளையும் தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை,மாறாகப் புலிகளை எதிர்க்கிறார்கள், அதனாலேயே என்னைத் தெரிவு செய்கிறார்கள் என்றொரு மாயையும் அவர் கட்டமைக்க நினைக்கிறார். இந்தப் புலிநீக்க அரசியல் திமிரின் மீது சம்மட்டியால் அடித்தது போன்று, இப்போது அவரது சொந்தக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு பலமாகக் கிளம்பியுள்ளது. திட்டமிட்டுப் புலிகளுக்கு எதிரான கருத்தைச் சொல்லி, சர்ச்சையில் சிக்கி, மறைமுகமான கவனக்கோரலைச் செய்வதும், பின்னர் அதை மறக்கடிக்கும்படி ஏதும் நீதிமன்ற வழக்குகளில் வென்றுவிட்டு , “சாணக்கியன்” என்னும் பட்டத்தை தனக்குத்தானே சூடி, வாக்குகளை அள்ளிவருவதும் இனியும் நடக்குமா என்பதை தேர்தலில் மக்கள் முடிவு செய்யத்தான் போகிறார்கள்.

# தேர்தலுக்கு எதிரான மனுக்கள் மே 18, 19 இல் விசாரணைக்கு!

## உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானம்

**கொழும்பு, மே 12**

**கொரோனா வைரஸின் தாக்கத்துக்கு மத்தியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராகவும், பொதுத்தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி நடத்தும் நோக்கில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரியும் பல்வேறு தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் நடைபெறும் என்று உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.**

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் முர்து பெர்னாண்டோ, துரைராஜா ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்மானத்தை நேற்று எடுத்தது. இந்த மனுக்களில் ஒன்று மட்டும் நேற்றுக் காலை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது இதுபோன்ற 7க்கும் மேற்பட்ட மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்று மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறினார். இவை அனைத்தையும் ஒரே வேளையில் எடுக்க வேண்டும் எனஅவர்விடுத்தகோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இந்த மனுக்களை ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன்பாக விசாரிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பும், அரச தரப்பில் முன்னிலையான சட்டத்தரணியும் வெளிப்படுத்திய கருத்தைக் குறித்துக் கொண்ட பிரதம நீதியசர் இது தொடர்பில் தாம் உரிய முடிவை எடுத்து அறிவிப்பார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றைய வழக்கில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீஜயசுந்தர சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ரூமேஷ் டி சில்வாவும், ஜனாதிபதியின் நலனைக் கவனிப்பதற்காக மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சிந்திகா தேமுனி டி சில்வாவும், எதிர் மனுதாரர்களுள் ஒருவரான தேர்தல்கள் ஆணையாளர் ரட்ணஜீவன் கூல் சார்பில் சட்டத்தரணி அஸங்க தேவேந்திரவும் முன்னிலையாகினர். (எ-22)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சர்வதேச ரீதியில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 12

பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் உயிர்களை காவுகொண்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் மே 18 ஆம் திகதி பல்வேறு ஒளி, ஒலி அலை தொழிநுட்பம் மூலம் உலகளாவிய ரீதியில் நினைவேந்தப்படவுள்ளது.

ஐக்கிய அமெரிக்க தமிழர் செயற்பாட்டு குழு, பிரித்தானிய தமிழர் பேரவை, கனடிய தமிழர் பேரவை, அவுஸ்திரேலிய தமிழர் பேரவை, அயர்லாந்து தமிழர் பேரவை, அமைதிக்கும் நீதிக்குமான ஒற்றுமை குழு தென்னாப்பிரிக்கா ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளன.

இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடிக்கும் இந்த நேரடி நிகழ்வு ஐக்கிய இராச்சியத்திலும், அயர்லாந்திலும் சரியாக மாலை 5 மணிக்கும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடாவில் நண்பகல் 12 மணிக்கும், அவுஸ்திரேலியா சிட்னியில் மே 19 ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-105)

# கோத்தாவுக்கு மீண்டும் சிக்கல்!

## உயர்நீதிமன்றம் செல்ல தயாராகின்றது சஜித் அணி

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நியமனத்துக்கு எதி ராக உயர்நீதிமன்றம் செல்ல ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் சிலர் தயாராகி வருகின்றனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அண்மையில் வெளியிட்ட பெடரல் ரெஜிஸ்டரை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு வழக்குத் தொடர்வதன் சாத்தியம் தொடர்பாக கட்சி முக்கியஸ்தர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பதிவுக்கமைய கோத்தாபய ராஜபக்சவின் பிரஜாவுரிமை இவ்வருடம் மே மாதம் 8 ஆம் திகதியே இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும், அதனால் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிட்டது தவறு எனவும் இந்தப் பேச்சுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமையி ருக்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளதால் கோத்தாபய ராஜபக்சவின் நியமனத்தை உயர்நீதிமன்ற செயற்பாட்டினூடாக இரத்துச் செய்ய இவர்கள் திட்டமிட்டுள் ளனர். கோத்தாபய ராஜபக்சவின் நியமனத்தை இரத்துச் செய்து அடுத்து கூடுதல் வாக்குப் பெற்ற சஜித் பிரேமதா ஸவை ஜனாதிபதியாக ஏற்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் இது தொடர்பான கருத்தொன்றை தனது ருவிட்டரில் குறிப்பிட் டிருந்தார். இரட்டைப் பிரஜாவுரிமையிருக்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் கோத்தாபய ராஜ பக்ச அரசமைப்பை மீறியுள்ளார் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)

# ஊரடங்கில் யாழ்ப்பாணத்தில் 28,650 வீட்டுத் தோட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 12

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 28 ஆயிரத்து 650 வீட்டுத் தோட்டங்கள் ஊரடங்கு காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.**



நாட்டில் அசாதாரண நிலை காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டக் காலத்தில் வீட்டில் இருக்கும் போது, அதனைப் பயனுள்ளதாக மாற்றுவதற்கு நாடு முழுவதும் 10 லட்சம் வீட்டுத் தோட்டத்தை அமைக்குமாறு அரசு வலியுறுத்தியிருந்தது.

அதற்கமைவாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு,கமநல சேவைகள் நிலையம், மற்றும் திருநெல்வேலி விவசாயப் பிரிவு ஊடாக 5 வகையான மரக்கறி விதைகள் மற்றும் நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் 28 ஆயிரத்து 650 வீட்டுத் தோட்டங்கள் ஊரடங்குக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# தனிநபர் இடைவெளியை தளர்த்துவதால் ஆபத்து!

## எச்சரிக்கின்றார் ரணில்



கொழும்பு, மே 12

கொரோனா வைரஸ் தொடர்பான பரிசோதனைகளின் அளவை அதிகரிக்காது தனிநபர் இடைவெளியைத் தளர்த்துவதால் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏற்கனவே கூறப்பட்டமைக்கு அமைய நாளொன்றுக்கு முன்னெடுக்கப்படும் பரிசோதனைகளின் அளவை 3 ஆயிரம் வரை அதிகரிக்க வேண்டும். வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு இலங்கைக்கென உலக வங்கியால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் நாட்டில் நிதிச் சிக்கல் உள்ளது என்று கூறமுடியாது.

கடந்த சனிக்கிழமை வரை சர்வதேச ரீதியில் 40 லட்சத்துக்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏனைய நாடுகளைப் போன்றே இங்கும் தனிநபர் இடைவெளி பேணப்பட்டு வருகின்றது. தற்போது எமது நாட்டில் கட்டம் கட்டமாக தனிநபர் இடைவெளி தளர்த்தப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையின் ஆலோசனையைப் பெற்று இதை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.


பரிசோதனை அளவுகளை அதிகரிக்காது தனிநபர் இடைவெளி தளர்த்தப்பட்டால் அதனால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும். அதே போன்று நோய் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் என்பவற்றில் நேரடியாகத் தொடர்புபடுபவர்களினதும் ஏனைய அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களினதும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

நாம் அரசியல் இலாபத்துக்காக அன்றி நாட்டுக்காக இந்த அர்ப்பணிப்பைச் செய்கின்றோம். அதே போன்று செயற்பட வேண்டியது அரசாங்கத்தினதும் பொறுப்பாகும் என்பதைக் கூற விரும்புகின்றேன். இவ்வாறு செயற்படுவதன் மூலமே ஆபத்தைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (ஏ)

# பாடசாலைகளை மீள ஆரம்பிக்க கலந்தாய்வு

வவுனியா,மே 12

வவுனியாவில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.



வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மகேந்திரன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

பாடசாலை ஆரம்பிக்கும் போது, கொவிட் 19 தொடர்பில் உருவாக்கப்பட வேண்டிய கண்காணிப்புக் குழு, சுகாதார நடைமுறைகள், மாணவர்கள் மத்தியில் அறிவுறுத்தப்பட வேண்டிய விடயங்கள், பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன், தெற்கு வலயத்திட்டமிடல் பிரிவு பொறுப்பதிகாரி திருமதி சொரூபன், வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆசிரியர்கள், சுகாதாரத்துறை வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-18)



# மாடுகள் ஏற்றி சென்றவர் கைது

சாவகச்சேரி,மே 12

அனுமதிப் பத்திரமின்றி சவாரி மாடுகளை வண்டியில் ஏற்றிச் சென்ற நபரைப் பொலிஸர் கைது செய்தனர்.

குறித்த நபர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவர் மாடுகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார். (க)

# பொதுப் போக்குவரத்துக்கு மக்களை அனுமதிக்காதீர்!

## அரசுக்கு வேண்டுகோள்

கொழும்பு, மே 12

அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்கு பொது போக்குவரத்தைப் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கவேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க, போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சிடம் கேட்டுள்ளார்.

அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்கள் மட்டுமே பேருந்து மற்றும் தொடருந்தில் பயணிக்க முடியும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ரயில்வே திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்கள் மட்டுமே அலுவலக தொடருந்துகளில் பயணிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளுக்காக அரச மற்றும் தனியார் துறைகளின் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய முதல் வாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேயின் பிரதிப் பொது முகாமையாளர் எஸ். பொல்வட்டேஜ் தெரிவித்தார்.

பதிவுசெய்யப்பட்ட பயணிகளுக்கு ரயில் மற்றும் ஆசனத்தின் எண் பற்றி குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) மூலம் அறிவிக்கப்படும். எஸ்.எம்.எஸ் விவரங்களை சரிபார்த்து நிலையத்திலிருந்து பயணிகளுக்கான பயணச் செயல்முறை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# நல்லாட்சியில் கொரோனா ஏற்பட்டிருந்தால் சர்வநாசம்

## கண்டுபிடித்தார் சாந்த பண்டார

கொழும்பு,மே 12

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருந்தால் பெரும் விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சி அரசாங்கத்தை விட, தற்போதைய அரசாங்கம் வினைத்திறனாகச் செயற்படுகின்றது. ஜனாதிபதி ,பிரதமருக்கு இடையிலான இணக்கப்பாடு சாதக காரணியாகவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமர் இருவருக்கும் இடையிலான முரண்பாடு நல்லாட்சி அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தியது. ஆகவே ஒப்பீட்டளவில் கடந்த அரசாங்கத்தைக் காட்டிலும் தற்போதைய அரசாங்கம் வினைத்திறனுடன் செயற்படுகின்றது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுஎதிர்தரப்பினர் செயற்படுகின்றனர்.

கொரோனா வைரஸ் மத்தியில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அரசாங்கம் எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்காது-என்றார். (க)

# கசிப்பு உற்பத்தியாளர் மூவருக்கு மறியல்

சாவகச்சேரி,மே 12

கசிப்பு உற்பத்தியாளர் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸார் நடத்திய சோதனையில், 50 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவும், 80 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டன. இதில் தொடர்புடைய மூவரையும் கைது செய்தனர்.

மூவரையும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-9)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை:
# பிள்ளையான் மீதான வழக்கு ஜூலை 27 வரை ஒத்திவைப்பு

**கொழும்பு, மே 12**

**கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அவருக்குக்கான விளக்கமறியலும் அன்றைய தினம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் மீதான வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி, இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டு ஒத்திவைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாய மதுசிங்க (வினோத்) ஆகி யோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015 ஆண்டு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-22)



## கசிப்பு உற்பத்தி; மூவர் கைது

நுவரெலியா, மே 12

நுவரெலியா, டயகம பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

டயகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 7 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு, ஒரு லட்சத்து 80 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களை நுவரெலியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ)

## இன்று மின் தடை

யாழ்ப்பாணம், மே 12

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வவுனியா மாவட்டதில் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், துட்டுவாகை, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலி ருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம், சீனத்துறை முகம் ஆகிய இடங்க ளிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## ஆற்றில் மூழ்கி 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு!

அவிசாவளையிலுள்ள சீதாவக்கை ஆற்றில் குளிக்கச் சென்ற இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். எம்பிலிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 22, 28 வயதுகளையுடைய இளைஞர்களே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் சீதவாக்கபுரவி லுள்ள தொழிற்சாலையொன்றில் கடமையாற்றுபவர்கள் என்றும், வெரபிட்டிவ பிரதேசத்தில் இவர்கள் தற்காலிகமாக தங்கியிருந்துள்ளனர் எனவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவிசாவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

## காங்கேசன்துறையில் நல்லிணக்க மையம்



யாழ்ப்பாணம்,மே 12

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் நல்லிணக்க மையம் நேற்றுத் திறக்கப்பட்டது. நல்லிணக்கமையக் கட்டடத் தொகுதியை யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி திறந்தார்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய,

கடந்த சில வாரங்களாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது, மக்கள் பட்ட இன்னல்களை நாமறிவோம். இந்த நிலைமை இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. எனினும் நாட்டில் இந்த நிலைமையைக் கொஞ்சம் கொஞ்சமாக விலக்கி மக்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தினாலும், பொதுமக்கள் கூட்டமாக வீதியில் இறங்குவதை நாங்கள் விரும்பவில்லை. தேவையானவர்கள் மட்டும் வீதிக்கு வாருங்கள். தேவையில்லாது வீதிகளில் பயணிக்காது, தனித்திருத்தல் உங்களுக்கும் நல்லது. உங்களுடைய சமூகத்துக்கும் நல்லது. என்றார்.(க)

## கண்காணிப்பாளர்கள் இன்றி தேர்தலை நடத்தவே முயற்சி!

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 11

சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இன்றி அரசு தேர்தலை நடத்த முயற்சிப்பது ஜனநாயக விரோத செயலாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது சர்வதேசம் கொரோனா என்ற கொடிய தொற்றுக்குள் சிக்கியுள்ளது. சர்வதேச விமான சேவைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அரசு அவசர அவசரமாகப் பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் திகதி குறிப்பிட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக் குழுவினரோ, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்புக் குழுவினரோ இங்கு வருவதற்கான சூழ்நிலை இல்லை.

முழு உலகமுமே தற்போது கொரோனா பீதியில் உள்ளது. இந்த நிலைமையில் தேர்தல் அவசியமா என்ற கேள்வி எழுகின்றது - என்றார். (எ)

## ரயில் நிலையங்களில் வெப்பம் அளவிடும் கருவி

கொழும்பு, மே 12

பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஏறக்குறைய இரண்டு மாதங்கள் நடைமுறையில் இருந்த ஊரடங்கு உத்தரவு நாட்டின் பல இடங்களில் தளர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பொதுமக்கள் அதிகளவாக கூடும் ரயில் நிலையங்களில் வெப்பநிலை அளவிடும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. கொரோனா வைரஸின் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார்.

கோட்டை ரயில் நிலையம் போன்ற நிலையங்களில் இந்த கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன இவற்றின் மூலம் தொற்றுள்ளவர்களை இலகுவாகக் கண்டறிய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த நடைமுறையடை நாடு முழுவதும் உள்ள முக்கிய ரயில் நிலையங்களில் நிறுவுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.(எ)

## மன்மோகனுக்காக பிரார்த்திக்கும் மகிந்த

கொழும்பு, மே 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றேன் என பிரதமர் மஹிந்த ராஜக்ஷ தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் திடீர் நெஞ்சு வலியால் எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு சேர்க்கப்பட்டு, அவருக்கு இதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவர் விரைவில் குணமடைய இலங்கை ம்க்கள் சார்பாக பிரார்த்திக்கின்றேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவர் விரைவில் முழுமையாக குணமடைந்து வீடு திரும்புவார் என்று பிரார்த்திக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் விநாயகர் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. (ஐ-159)

# சுமந்திரனின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவே முடியாது

## மாவை. சீற்றம்

யாழ்ப்பாணம், மே 12



தமிழீழ விடுதலைப் புலிகளையும், ஆயுதப் போராட்டங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் வெளியிட்ட கருத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் தனிப்பட்ட கருத்தாகவும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் கண்டங்களை வெளியிட்டுள்ளன.

1976ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு நடைபெற்றது. தமிழர் இழந்த சுதந்திரத்தை மீட்க (சுதந்திரத் தமிழீழம்) வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு ஆணை கேட்டு பெரு வெற்றி பெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழின விடுதலைக்காக 1971, 1972களில் உருவாகியது. 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை ஏற்று ஆயுதப் போராட்டத்தின் மூலம் அந்தச் சுதந்திரத்தை அடைய வேண்டுமென்று இயங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் ஒருபொழுதும் பங்காளிகளாக இருந்ததில்லை. 1983ஆம் ஆண்டு ஜுலைக் கலவரத்தின் பின் இந்திய தலையீட்டுடனும், அனுசரணையுடனும் இடம்பெற்ற பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் தலைவர்கள் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2001-2002 காலப்பகுதியில் நோர்வே அனுசரணையுடன் விடுதலைப்புலிக ளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் பேச்சு ஆரம்பித்தது. 2001ஆம் ஆண்டு டிசெம்பரில் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தனர். 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் நோர்வே ஒஸ்லோ நகரில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுக்கு ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. அந்த வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் சர்வதேசத்துக்கு முன் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் 'தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சு நடத்தி இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்' என்று அறிவிக்கப்பட்டது. அவ்வேளையிலிருந்து தான் சர்வதேசத்தின் முன்னிலையில் தமிழர்களின் உச்ச அரசியல் பலம் ஏற்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளும் தொடர்ச்சியான பேச்சுக்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற ஆயுதப் போரும், போர் நிறுத்தமும், சர்வதேச அரங்கில் இலங்கை அரசுடன் ஒஸ்லோவில் பேச்சு நடத்த உடன்பட்ட காலத்தில் ஜனநாயகக் கோட்பாட்டில் இயங்கி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அப்பேச்சுக்களில் பங்கு கொண்ட விடுதலைப் புலிகளை அங்கீகரித்து நின்ற காலத்திலிருந்துதான் இலங்கை இனப்பிரச்சனை சர்வதேசத்திலும் அரசியல் விடுதலைப் பரிணாமத்தைப் பெற்றது. ஒஸ்லோ உடன்படிக்கையின் அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் அறிக்கைகளையே 2004 ஆம் ஆண்டு முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுத் தேர்தல்களில் பெரு வெற்றி பெற்று வருகிறது.

ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயுத மேந்திப் போராடிய இயக்கத்தினர், போராளிகளின் வழக்குகளில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம் முதலான பல சட்டத்தரணிகள் வாதாடியிருந்தனர்.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட காலத்தில் இந்திய காங்கிரஸ் அமைப்புக்களில் ஜவர்கலால் நேரு, சுபாஸ் சந்திர போஸ் முதலான தலைவர்களிருந்தனர். மகாத்மா காந்தி காங்கிரசில் இடம்பெறவில்லையாயினும் அவர் ஆதரவும் தலையீடுகளும் இருந்தன. ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களைக் கொன்ற ஆஷஷ் துரையை கொன்ற பகவத்சிங், உத்தம சிங் முதலானோர் கைதுசெய்யப்பட்டு கராச்சி நீதிமன்றத்திலே தூக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்ற வழக்கில் ஜவர்கலால் நேரு தோன்றி பகவத்சிங் முதலானோரை விடுதலை செய்யவேண்டுமென வாதாடினார். தூக்குத் தண்டனைக்கு எதிராக மகாத்மா காந்தி இங்கிலாந்து மகாராணிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் மகாத்மா குறிப்பிட்டார். "பகவத்சிங் முதலானோரின் போராட்ட வழிமுறையை நான் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், அவர்கள் தியாகத்தை மதிக்கிறேன். அவர்களைத் தூக்கிலிட வேண்டாம்" என்று கேட்டிருந்தார். இலங்கையிலும் எங்கள் வழக்கறிஞர்களும் ஜவர்கலால், நேரு, மகாத்மா காந்தி போலவே நடந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழீழ விடுதலை அமைப்புப் போராளிகளை போரினால் பாதிப்புற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களை தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைத்துத் தமிழ்ச் சமூகத்தின் விடுதலை இயக்கத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கைத் திட்டத்தையே கொண்டு செயல்படுகிறது.

தென்னிலங்கையில் பௌத்த சிங்கள ஒற்றையாட்சி, பெரும்பான்மைத்துவ ஆட்சிச் சித்தாந்தத்துடன் எழுச்சி பெற்றுவரும் அரசியல் இராணுவச் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள், அரசியல், சமூக அமைப்புக்கள் ஒன்றுபட்டு எழுச்சிபெற வேண்டியதே இன்று வேண்டியதாகும். ஜனநாயக அரசியலில் அதுவும் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்து நிற்கும் மக்களிடம் கருத்து வேற்றுமைகளில் இணக்கத்தை உருவாக்கி பிளவுகளுக்கு இடமளிக்காமல் நம்பிக்கையை ஏற்படுத்துவதே சிறப்பானதாகும். விரைவில் தமிழ் அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகள் ஒன்றுகூடி மேற்கொண்டு செயற்படவேண்டிய தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனக் கருதியுள்ளோம்- என்றுள்ளது. (ஓ,5)

# புலிகளின் பே
# ஒருபோதும் ஏ

## இப்படிச் சொல்சி

கொழும்பு, மே 12



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், சிங்கள மக்களுடன் வாழ்வது அதிர்ஷ்டம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் அமைப்பா?.

**பதில்:** இல்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு 70 ஆம் ஆண்டுகளில் உருவானது. ஆனால் எமது கட்சி 1949 ஆம் ஆண்டு உருவானது.

**கேள்வி:** ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல் கூட்டத்தை வேலுப்பிள்ளை பிரபாகரன்தானே நடத்தினார்?

**பதில்:** இல்லை.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் தேவைக்கு அமைய உருவாக்கப்படவில்லை என நீங்கள் கூறுகிறீர்களா?

**பதில்:** இல்லை. 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், போர் நிறுத்தம் ஒன்று நடைமுறையிலிருந்தது. இதனால், அந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஒன்று இருந்தது. அது அரசும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய காலம்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான தலைவர் இரா.சம்பந்தனா அல்லது எம்.ஏ. சுமந்திரனா என்ற உண்மையை தெளிவாக கூறுங்கள்.

பதில்: சம்பந்தனே தலைவர்.

**கேள்வி:** அது வெளியில் தெரியும் விடயம், நான் கேட்பது உண்மையான தலைவர் யார்?.

பதில்: உண்மையான தலைவரும் சம்பந்தன் ஐயா அவர்கள்தான்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இயக்குவது சுமந்திரன் தான் என நான் நேரடியாக கூறினால்.

**பதில்:** இல்லை நான் அதனை ஏற்க மாட்டேன். அதனை நான் நிராகரிக்கின்றேன்.

**கேள்வி:** சுமந்திரன் கட்சிக்குள் அழுத்தங்களை கொடுக்கின்றாரா?

பதில்: சம்பந்தன் அவர்கள் என்னுடன் ஆலோசித்து செய்றபட்டு வருகிறார்.

**கேள்வி:** அப்படியானால் நீங்கள் அதிகாரபூர்வமற்ற தலைவர் என்று என்னால் கூற முடியுமா?.

**பதில்:** அப்படி கூற முடியாது. சில நேரங்களில் நான் வழங்கும் ஆலோசனைகளை சம்பந்தன் ஏற்றுக்கொள்ளமாட்டார். சம்பந்தன்தான் இறுதியான முடிவுகளை எடுப்பார்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த அனைத்து தலைவர்களும் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சினர். அதன் காரணமாகதானே புலிகளின் நோக்கங்களுக்காக குரல் கொடுத்தனர்.

**பதில்:** புலிகளின் நோக்க
கொடுத்தனர் என்று என்
ஆனால் புலிகளுடன் இ
னர். 2001 ஆம் ஆண்டு
ஆண்டு வரை புலிகளுட
பணியாற்றினர். அந்த கா
யில் இருந்த அரசும் புலி
தியது.

**கேள்வி:** நீங்கள் 2010 அ
பட்டியல் மூலமாக அரசி
சட்டத்தரணியாக விடுத
கள், புலிகளின் சார்பில்
போனவர்கள் சார்பில் வ
வந்தீர்கள்.

**பதில்:** விடுதலைப்புலிகள்
னேன் என்று எவராலும் சு
சிவில் வழக்குகளில் ஆஜ
இதனால், நான் குற்றவி
ஆஜராகவில்லை. 90கள
ணியாக கடமையை ஆர
வழக்குகளில் ஆஜராகினே
பில் ஆஜராகியிருந்தேன்
ஆஜராகினேன் என்று எ
யாது.

**கேள்வி:** 2015 ஆம் ஆ
ஆயிரம் வாக்குகளை பெ
சார்பில் ஆஜராகி, யாழ்ப்பா
வாக்குகளை பெற முடியா

**பதில்:** முடியும். அன்று
ஜே.வி.பியினர் யாழ்ப்பா
தின பேரணியை நடத்தும்
சட்டை அணிந்து அவர்க
வீதிகளில் சென்றேன். எ
பார்க்கமாட்டார்கள்.

**கேள்வி:** நீங்கள் தனிநாடு
கோட்பாட்டை ஏற்றுக்கொ

**பதில்:** எப்போதும் இல்லை

**கேள்வி:** ஐக்கியமாக இருக்
நிலைப்பாட்டை ஏற்றுக்கெ

**பதில்:** ஐக்கியமாக இருக்க
அனைத்து இனங்களுக்கு
களை கையாளும் அதிகா
டும்.

**கேள்வி:** அப்படியானால், ஏ
கூட்டமைப்பு சமஷ்டியை

**பதில்:** சமஷ்டியைதான்
றோம். சமஷ்டி மூலமே அ
களுக்கும் அரச அதிகாரங்க
முடியும்.

**கேள்வி:** அப்படியானால் அ

# ...போராட்டத்தை ஏற்கமுடியாது!

## ...ல்கிறார் சுமந்திரன்



...ன் நோக்கங்களுக்காக குரல்
...ன்று என்னால் கூறமுடியாது.
...ளுடன் இணைந்து செயற்பட்ட
...ம் ஆண்டு முதல் 2004 ஆம்
... புலிகளுடன் இணக்கத்துடன்
...். அந்த காலத்தில்தான் ஆட்சி
...அரசும் புலிகளுடன் பேச்சு நடத்

...ள் 2010 ஆம் ஆண்டு தேசிய
...மாக அரசியலுக்கு வந்தீர்கள்.
...க விடுதலைப் புலிகளின் கைதி
... சார்பில் அல்லது காணாமல்
... சார்பில் வாதாடிய நிலையில்

...லைப்புலிகள் சார்பில் வாதாடி
...வராலும் கூற முடியாது. நான்
...ளில் ஆஜராகும் சட்டத்தரணி.
...ன் குற்றவியல் வழக்குகளில்
...லை. 90களில் நான் சட்டத்தர
...மயை ஆரம்பித்த போது சில
...ஆஜராகினேன். ஜே.வி.பி சார்
...இருந்தேன். புலிகள் சார்பில்
... என்று எவராலும் கூறமுடி

... ஆம் ஆண்டு தேர்தலில் 58
...துகளை பெற்றீர்கள். ஜே.வி.பி
...கி, யாழ்ப்பாணத்தில் இந்தளவு
...பெற முடியாதே.
... அன்று தேர்தல் காலத்தில்
... யாழ்ப்பாணத்துக்கு வந்து மே
... நடத்தும்போது நானும் சிகப்பு
...து அவர்களுடன் யாழ்ப்பாண
...ன்றேன். எமது மக்கள் அப்படி
...கள்.
...ள் தனிநாடு, பிரிவினைவாதக்
...ஏற்றுக்கொள்ளும் நபரா?.
...ம் இல்லை.
...மாக இருக்க வேண்டும் என்ற
... ஏற்றுக்கொள்கிறீர்களா?.
...க இருக்க வேண்டும். எனினும்
...ங்களுக்கும் அரச அதிகாரங்
...ளும் அதிகாரம் இருக்க வேண்

...யானால், ஏன் தமிழ்த் தேசியக்
...மஷ்டியை கோருகிறது.
...யைதான் நாங்கள் கோருகி
... மூலமே அனைத்து இன மக்
... அதிகாரங்களைப் பயன்படுத்த

...யானால் அது தனி நாடு.

**பதில்:** இல்லை. சமஷ்டி என்பது தனி நாடு அல்ல.

**கேள்வி:** சமஷ்டி என்றால் நாடு பிளவுப்பட்டு விடும்

**பதில்:** அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பல ஐரோப்பிய நாடுகளில் சமஷ்டி முறையே இருக்கின்றது. அவற்றை நாங்கள் தனி நாடுகள் என்று எப்போதும் கூறுவதில்லை. அவை வலுவான நாடுகள். சமஷ்டி இருப்பதன் காரணமாகவே அந்நாடுகள் வலுவான நாடுகளாக இருக்கின்றன.

**கேள்வி:** சிங்கள மக்களுடன் பகைமை கொள்கின்றீர்களா?

**பதில்:** இல்லை நான் ஐந்து வயது முதல் கொழும்பில் வாழ்கிறேன். எனக்கு சில நண்பர்கள் உள்ளனர். நான் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்வதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

**கேள்வி:** நீங்கள் இந்த நாட்டின் தேசியக் கொடியை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** ஆம் அது தற்போது எங்களது தேசிய கொடி அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

**கேள்வி:** தேசிய கீதம்?

பதில்: ஆம் தேசிய கீதத்தை ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் தேசியக் கொடியை ஏற்றுகிறோம். நானும் சம்பந்தனும் மாத்திரமே அதனை செய்கிறோம்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் சிலர் தேசியக் கொடியை உயர்த்துவதில்லை.

**பதில்:** வரலாற்றை நோக்கிப் பார்க்க வேண்டும். 1972 ஆம் ஆண்டு முதலாவது அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது எம்மை வெளியில் வைத்து விட்டு அதனை உருவாக்கினர். தமிழ் மக்களை இணைத்துக்கொள்ளாது அவர்களின் யோசனைகளைப் பெறாது, தமிழ் மக்களை தேசிய ரீதியில் ஒதுக்கி விட்டு, அதனை உருவாக்கினர். இதன் பின்னரே 74, 76 ஆம் ஆண்டுகளில் தனி நாடு வேண்டும் என்ற குரல் எழுப்பபட்டது. அப்போது நிராகரித்த தேசியக் கொடியை நாம் எப்படி தற்போது ஏற்றுவது என்ற பிரச்சினை சிலருக்கு உள்ளது. எனக்கு அந்த பிரச்சினையில்லை.

**கேள்வி:** நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக் கொள்பவரா?.

**பதில்:** இல்லை. ஏற்றுக்கொள்பவன் அல்ல.

**கேள்வி:** எந்த வகையிலும் ஏற்றுக்கொள்வதில்லை.

**பதில்:** ஆம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்வதில்லை. இதனை நான் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல அனைத்து இடங்களிலும் கூறுகிறேன். இதன் காரணமாக எனக்குக் கடும் எதிர்ப்பு காணப்படுகிறது. எங்களுக்காக போராடியவர்களை ஏன் ஏற்றுக்கொள்வதில்லை என கேட்கின்றனர். ஆயுத அமைப்பை எப்போதும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதால், புலிகளின் ஆயுத அமைப்பை ஏற்கவில்லை எனவும் சுமந்திரன் கூறியுள்ளார். (ஒ,5)

# விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்த அனுமதியோம்!

## முன்னாள் எம்.பி சரவணபவன் அறிக்கை



யாழ்ப்பாணம், மே.12

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ, தமிழரசுக் கட்சியையோ மேடையாகப் பாவித்து மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவோ, விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தவோ எவரையும் அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன். சிங்கள ஊடகமொன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் 'விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று கூறியிருந்தார். இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் தாயகத்தில் பிறந்த ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் ஆயுதப் போராட்டத்துடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றான். எமது மறுக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெற நடத்தப்பட்ட போராட்டங்களில் எமது இன்னல்களையும், இழப்புக்களையும் ஏற்றுக் கொண்டே பங்கு கொண்டிருக்கின்றனர். ஆயுதப் போராட்டம் என்பது தனி மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு வன்முறை வடிவமல்ல. அது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் எதிர்கொண்ட மனித நேயமற்ற ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடும் முனைப்புடன் எழுச்சி பெற்ற ஒரு பெரும் உணர்வுப் பிழம்பு.

ஆனால் தமிழ் மக்களின் தலைமைச் சக்தியான புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் ஆயுதப் போராட்ட வடிவத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஊடுருவியுள்ள ஒரு சில மக்கள் விரோத சக்திகள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதிலும், அதைத் தாங்கள் என்றுமே ஏற்றுக் கொண்டதுமில்லை, ஏற்கப் போவதுமில்லை எனவும் கூறிவருகின்றன."எதிரிகளை விட துரோகிகளே மோசனமானவர்கள்"என்று தேசியத் தலைவர் சொல்லியிருக்கிறார். அப்படி ஆபத்தானவர்களே இவர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏக பிரதானியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் இந்த நபருக்கு எமது மக்களும், போராளிகளும் இரத்தம் சிந்தி, உயிர் விலை கொடுத்து மேற்கொண்ட ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் உரிமையை யார் வழங்கினார்கள்?. தமிழ் மக்களையும், அவர்களின் தியாகம் நிறைந்த போராட்டத்தையும் அவமானப்படுத்தும் கருத்தைக் கூறும் உரிமையை வழங்கியது யார்?.

இப்படியான ஒரு கருத்தை வெளியிட்டதன் மூலம் எமது விடுதலைக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்துடன் இணைந்து செயற்பட்டும், ஆதரவு வழங்கியும் பங்களிப்பை வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஏனைய ஆதரவாளர்களையும் மிக மோசமாக அவர் அவமதித்துள்ளார். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எமது மக்கள் வெறுப்படைய வைக்கவும், அந்நியப்படுத்தவும் மேற்கொள்ளப்படும் சதியென்றே நாம் பார்க்கின்றோம். ஆயுதப் போராட்டம் என்பது ஆகாயத்தில் இருந்து கொட்டப்பட்டதல்ல . மீண்டும் மீண்டும் இனக் கலவரங்கள் என்ற பேரில் எமது மக்கள் வெட்டியும், சுட்டும், உயிருடன் எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டபோது, எமது சொத்துக்கள் சூறையாடப்பட்டும், தீயிட்டு கொள்ளையிட்டு அழிக்கப்பட்டபோதும் நாம் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கேட்டு சாத்வீக முறைகளில் போராட்டங்களை நடத்தினோம். எமக்கு ஆரம்பத்தில் காடையர்களாலும் பின்பு படையினராலும் வன்முறைகள் மூலம் பதிலளிக்கப்பட்டது. சிறைவாசம், சித்திரவதை, உயிர் பறிப்பு என்பனவே எமக்குப் பேரினவாதிகளால் வழ்ங்கப்பட்டன. எனவே குட்டக் குட்டக் குனிய முடியாத நிலையில் நாம் எதிர்த்துப் போராட முடிவு செய்தோம். அதுவே ஆயுதப் போராட்டமாக வெடித்தது.

எனவே ஆயுதப் போராட்டம் எம்மால் வலிந்து உருவாக்கப்படவில்லை. ஆயுதம் எடுத்துப் போராட அன்று எம்மீது கட்டவிழுத்து விடப்பட்ட ஆயுத வன்முறைகள் நிர்ப்பந்தித்தன. நாம் போராடாவிட்டால் அழிவு நிச்சயம் என்ற நிலையிலேயே ஆயுதமேந்திப் போராடினோம். கொழும்பு வாழ் உல்லாசவாசிகளுக்கும், மேல் மட்ட வாழ்வின் சுகபோகங்களில் நீந்துபவர்களுக்கும் மெய்யைப் பொய்யாக்கி, லட்சங்கள் சம்பாதிப்பவர்களுக்கும், எமது வலியைப் புரிந்து கொள்ள முடியுமா?. எமது வேதனைகளை உணர்ந்து கொள்ள முடியுமா?. விடுதலைப் புலிகள் மீது போர்க் குற்ற விசாரணை நடத்தவேண்டும் எனக் கூறியவர், போராளிகளைப் பயங்கரவாதிகள் என்று நாக்கூசாமல் சொன்னவர், எமது மக்கள் அரச ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபடப் போராட்டங்களை நடத்தியபோது மஹிந்த ராஜபக்சவுடன் சிரித்து விளையாடியவர் என பல மக்கள் விரோத நடவடிக்கைகளின் உரிமையாளரான இவர் ஆயுதப் போராட்டத்தைத் ஏற்கவில்லை என்றிருக்கின்றார். அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பிரமுகராக அவர் அப்படிச் சொல்ல என்ன உரிமை இருக்கின்றது?

இப்படியான நபர்களைக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள், கூட்டமைப்பை விட்டும், தமிழரசுக் கட்சியை விட்டும் வெளியேற்றி தமது கட்சிகளின் புனித பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ, தமிழரசுக் கட்சியையோ மேடையாகப் பாவித்து மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவோ, விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தவோ எவரையும் அனுமதிக்க முடியாதென்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது . (அ)

# தன்னையும் வண்டிலில் இழுப்பர் என்ற நினைப்பு!

### சுமந்திரனுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சாட்டை

வவுனியா, மே 12

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பின் விசுவாசி, தமிழ் மக்களில் கொஞ்சமும் அக்கறை கொள்ளாதவர். சேர்.பொன் இராமநாதன் போல தன்னையும் சிங்களவர்கள் வண்டிலில் இழுத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர் செயற்படுகின்றார்." என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் வவுனியா உறவினர்கள் தெரிவித்தனர். வவுனியாவில் அவர்கள் போராட்டம் நடத்தும் இடத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தனர்.

சுமந்திரன் கொழும்பை விரும்புகிறவர். கொழும்பின் விசுவாசி. தமிழ் மக்களில் கொஞ்சமும் அக்கறை கொள்ளாதவர். இலங்கை அரசியல் சாசனத்தைப் பாதுகாக்கும் ஒருவர். சேர்.பொன் இராமநாதன் போல தன்னையும் சிங்களவர்கள் வண்டிலில் இழுத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே அவர் பாடுபடுகின்றார். என்று மேலும் தெரிவித்தனர். (த-110)

# தமிழ்த் தேசியம் பற்றி அறியாதவர் சுமந்திரன்

### கஜேந்திரகுமார் சாட்டை

யாழ்ப்பாணம், மே 12

தமிழ்த் தேசியம் பற்றி அறியாதவர்தான் சுமந்திரன். இதனால் தான் அவர் ஆயுதப் போராட்டத்தைத் தவறு என்று தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றார்.

இவ்வாறு தெரிவித்தார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஆயுதப் போராட்டத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கையின் கொடியையும், இலங்கையின் தேசிய கீதத்தையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்" என்று சுமந்திரன் பல தடவைகள் தெரிவித்துவிட்டார். நாம் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நாள்முதல் கூட்டமைப்பு தேசிய கொள்கையிலிருந்து விலகியே பயணித்து வருகின்றது. இதை 11 ஆண்டுகளாக நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

2010ஆம் ஆண்டு சுமந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, "விடுதலைப் போராட்டத்தை அதர்மமாகப் பார்க்கின்றேன். இறுதியில் தர்மம் வென்றது" என்றவாறாகத் தெரிவித்திருந்தார். இன்று ஒரு முதிர்ச்சியான அரசியல்வாதியாகவும் அதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். சுமந்திரனே கூட்டமைப்பின் பேச்சாளர். அவரின் கருத்தே கூட்டமைப்பின் கருத்து. அதையே நாம் உத்தியோகபூர்வமான கருத்தாகவும் கொள்ளவேண்டும்.

அதைவிடுத்து வேறுசிலர் சுமந்திரனின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்ற பிம்பத்தைத் தோற்றுவிக்க முற்படுகின்றனர். அத்தகையவர்கள் தமது வாக்கு வங்கிகளைத் தக்கவைப்பதற்காகத் தற்போது போராடிக்கொண்டிருக்கின்றனர் - என்றார். (ம)

# போராளிகளின் தியாகத்தில் பகடையாடுகிறார் சுமந்திரன்

### ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆவேசம்

வவுனியா, மே.12

"எங்களின் தியாகங்கள் அர்ப்பணிப்புகளில் ஏறிநின்று பகடைஆடும் கபடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஊடகப்பேச்சாளருக்கு வழங்கப்போகின்றதா?" இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளது, ஜனநாயகப் போராளிகள் கட்சி.

இதுபற்றி கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழினத்தின் இருப்பு, உயிர்வாழும் உரிமை மறுதலிக்கப்பட்டபோது உங்களின் அதிமேதாவித்தனம் உங்களை, உங்கள் சிங்கள எஜமானர்களோடு மகிழ்ச்சியாக வைத்திருந்திருக்கலாம். ஆனால் கிராமங்களில் புத்தகப்பைகளைத் தூக்கியெறிந்துவிட்டு நாங்கள் ஏந்திநின்ற ஆயுதங்களே இன்றுவரை இலங்கைத் தீவில் தமிழர்களை உயிர் காத்து வைத்துள்ளது. தமிழ்த்தேசியம் தொடர்பில் தீர்க்கமான பார்வை இல்லாதவர்கள். ஆயுதப்போராட்டத்தின் அடிப்படை தெரியாதவர்களே. அத்தகையவர்களை தமிழர்களின் பிரதிநிதியாக்கியது இனத்தின் வரமா சாபமா என்றே எண்ணத் தோன்றுகிறது. இத்தகையவரை கூட்டமைப்பு ஊடகப்பேச்சாளராக வைத்திருக்கப்போகின்றதா? என்பதற்கான பதிலை நாம் கரிசனையுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம்- என்றுள்ளது. (த110)

# புலிகள் உருவாக்கிய கூட்டமைப்பில் நியமன ஆசனத்தைப் பெற்றது ஏன்?

### சுமந்திரன் மீது விக்னேஸ்வரன் காட்டம்

யாழ்ப்பாணம், மே 12



விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் கூறியுள்ளார். அப்படியென்றால் தம்பி பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எப்படி நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இதுகாறும் இருந்திருக்க முடியும்? தாய் பகை குட்டி உறவு என்ற கதையாகவல்லவா இருக்கின்றது? இவ்வாறான கருத்தை உடையவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அரசியல் பிரவேசம் செய்திருக்கக் கூடாது. இவ்வாறு முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுமந்திரனின் பேச்சுக்களால் சிங்கள மக்கள் மத்தியில் எமது போராட்டம் தொடர்பாகவும் எமது அரசியல் செயற்பாடு தொடர்பாகவும் தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. சிங்கள அரசுகள் தற்போது செல்லும் பாதை சரியென்று சிங்கள மக்கள் நினைக்கவும் வாய்ப்புண்டு.

விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் கூறியுள்ளார். அப்படியென்றால் தம்பி பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எப்படி நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இதுகாறும் இருந்திருக்க முடியும்? தாய் பகை குட்டி உறவு என்ற கதையாகவல்லவா இருக்கின்றது? இவ்வாறான கருத்தை உடையவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அரசியல் பிரவேசம் செய்திருக்கக்கூடாது. தனது கருத்துக்களை வெளிப்படையாக வடமாகாணத்திலோ கிழக்கு மாகாணத்திலோ மக்களுக்குக் கூறி சுயேச்சையாக வாக்குக் கேட்டிருக்கலாம். அல்லது சிங்களக் கட்சிகள் ஊடாக வாக்குக் கேட்டிருக்கலாம். யாழ் .தமிழ் மக்களின் தோளில் ஏறி பயணம் செய்து கொண்டு பெரும்பான்மையினரின் அடிவருடி போல் வேஷம் ஆடுவது சகிக்க முடியாது இருக்கின்றது. எனது பழைய மாணவரா இவ்வாறு பேசுகின்றார் என்று வெட்கமாக இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன நோக்கத்துக்காக யாரால் உருவாக்கப்பட்டது என்பது எல்லா மக்களும் அறிந்தது. தமிழ் மக்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களுக்கும் இது பற்றி தெரியும். ஆனால் சுமந்திரன் போன்றவர்கள்தான் உண்மையை அறியாமல் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்கின்றார்கள் போல் தெரிகின்றது. இதனால் எதைச் சாதிக்கப்பார்க்கின்றார்?

விடுதலைப் புலிகளுக்கு முந்தையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிறார். சுமந்திரனுக்கு வரலாறு தெரியவில்லையா அல்லது தெரியாததுபோல் நடிக்கின்றாரா? அப்படி நடிப்பதால் நல்லவர் என்ற பெயரை சிங்களவர்கள் மத்தியில் ஒருபோதும் அவர் பெற முடியாது. அவருக்குத் தமிழ் மக்களின் உணர்வுதான் புரியவில்லை என்றால் வரலாறுமா தெரியவில்லை. 1949இல் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது 2001இல். 2001ல் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில்தான் அவர் பேச்சாளராக இருக்கிறார் என்பதை அவருக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. சிங்களவர்கள் மத்தியில் சுமந்திரனைவிட அதிக காலம் நான் வாழ்ந்திருக்கின்றேன். அத்துடன் சிங்கள மக்களை உறவாகவும் கொண்டவன் நான். அவர்களுடன் உறவாக இருப்பது வேறு. எமது உரிமைகளை அவர்களிடம் எடுத்துக் கூறுவது வேறு. சிங்களவர்கள் மத்தியில் அதிக காலம் வாழ்ந்துவிட்டுத்தான் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு இங்கு வந்திருக்கின்றேன். சுமந்திரன் கூறியவை ஏதோ தனிப்பட்ட செல்வாக்கை சிங்களவர் மத்தியில் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கூறியது போல் தெரிகின்றது. தமிழ் மக்களின் வருங்கால நலம் பற்றி சிந்திக்காது தான் அவர் அங்கு பேசியுள்ளார்.

மற்ற இனங்களை மதிப்பது வேறு. அவர்களின் அடிமையாக வாழ விரும்புவது வேறு. மற்ற இனங்களை திருப்திப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு அவர்களின் அடிவருடியாகக் காட்டிக் கொள்வதை சுமந்திரன் பெருமையாக நினைக்கிறார் போல் தெரிகின்றது. இது சிங்கள மக்களுக்கு எம் தொடர்பில் தவறான தோற்றப்பாட்டையே உருவாக்கும். தமிழர்கள் அடிமையாக இருப்பதை அதிர்ஷ்டமாக நினைக்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும். சுமந்திரன் அவ்வாறு அடிமையாக இருப்பதை பெருமையாகக் கருதலாம். ஆனால் தமிழர்கள் சார்பில் பேசும் போது அவ்வாறு பேச அவருக்கு உரித்தில்லை.

அது மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தோல்வியை தழுவிய நிலையில், விரக்தி கொண்ட தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியது வரலாறு. அதனை நாம் எம் விருப்பு வெறுப்புக்களுக்காக மாற்றிச் சொல்ல முடியாது. கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்துவிட்டு, இப்போது வந்து வடக்கு கிழக்கு மக்களின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் பலவீனப்படுத்தவும் எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. வேண்டுமானால் இந்த மக்களைப் புரிந்து அவர்களுக்காக அவர்கள் கோரிக்கையின் பேரில் குரல் கொடுப்பது உத்தமமானது. இல்லை என்றால் விலகி இருந்து சுமந்திரன் அவர்கள் தாம் விரும்பும் சிங்கள மக்கள் மத்தியில் போட்டியிட்டு அரசியல் பதவிகளை வகிப்பது நல்லது.

சிங்களவர்களுக்கு எமது விடுதலைப் போராட்டம் தொடர்பில் புரிதலை ஏற்படுத்த வேண்டும். தம்பி பிரபாகரன் ஏன் ஆயுதம் ஏந்தினார் என்பதை நன்கு விளங்கிக்கொண்டுள்ள சிங்கள மக்கள் பலர் உள்ளனர். தமிழர் தம் போராட்டங்களை, நியாயங்களைப் பற்றிப் பேசுகின்ற சிங்களத் தலைவர்கள் தெற்கில் இருக்கின்றார்கள். அப்படியிருக்க தமிழர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, போராட்டத்தையும் அதன் ஒப்பற்ற தியாகங்களையும் இப்படி கொச்சைப்படுத்தும் தமிழின சாபக்கேடுகளை அடியோடு ஒழிக்க வேண்டும். தமிழ் மக்கள் இதில் மிகக் கடுமையான விழிப்புணர்வு கொள்ளாவிடின் தென்னிலங்கை பேரினவாதிகளைக் காட்டிலும் இத்தகைய மிதவாத நடிப்பாளர்கள் எம்மைக் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள். அதே கேள்வி சிங்களத்தில் என்னிடம் கேட்டிருந்தால் பிரபாகரனின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளால் முற்றும் முழுதுமாக உருவாக்கப்பட்டது என்று கூறியிருப்பேன், என்றுள்ளது. (ஒ.5)

# சுமந்திரனின் கருத்தை மன்னிக்கவே முடியாது!

## சீறுகின்றார் செல்வம் எம்.பி.



மன்னார், மே 12

**தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒட்டுமொத்த ஆயுதப்போராட்டத்தையும் தவறு என்று குறிப்பிட்டு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளமை மன்னிக்க முடியாத தவறு என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் சுமந்திரன் மேற்கண்ட கருத்தைக் கூறியிருந்தார். அது தொடர்பில் அடைக்கலாதன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு எம்.ஏ.சுமந்திரன் இப்படியான கருத்துக்களைச் சொல்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருடைய கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தில் பொது மக்கள், போராளிகள் ஒட்டு மொத்தமாக உயிரை அர்ப்பணித்துள்ளார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் உலகளாவிய ரீதியில் எங்களுடைய இனப்பிரச்சினை வரலாறாகப் பதியப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் இனப்பிரச்சினை சார்ந்த விடயங்களை இன்றைக்கு இலங்கை அரசுடன் பேசும் ஒரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் எங்களுடைய இனப்பிரச்சினை தொடர்பான முக்கிய விடயங்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளன. சுமந்திரன் அவ்வாறு கூறியதற்கு எதிராக தமிழ் அரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ் அரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் இந்த விடயத்தில் நிச்சயமாக ஒரு முடிவை எடுக்கும். ஆயுதப் போராட்டம் அகிம்சைப் போராட்டம் செய்ய இந்த அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதன் அடிப்படையில்தான் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டம் வீறுகொண்டு எழுந்து இந்த அரசைப் பணியவைத்த வரலாறுகள் பலவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாவதற்குக் காரணமான நோக்கத்தை சுமந்திரன் சீர்குலைத்துள்ளார். எனவே தமிழ் அரசுக் கட்சி சுமந்திரன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (த-56)

# தியாகங்களை கொச்சைப்படுத்தும் சுமந்திரனைக் கண்டிக்கின்றேன்

## முன்னாள் அமைச்சர் டெனீஸ்

மன்னார், மே 12

எம்மவர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்தும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்துக்களை வன்மையாகக் கண்டிப்பதாக, வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சரும் சட்டத்தரணியுமான பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது:

தங்களுக்கும் எனக்குமான நட்பு அதிகமாகவே உள்ளது. நட்பு வேறு கொள்கை வேறு. எம்மவர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். சம்பந்தன் ஐயாவிடம் இது தொடர்பில் சுட்டிக்காட்டுவதில் பிர யோசனம் இல்லை. ஏனெனில் அவர் பல தடவைகள் ஆயுதப் போராட்டத்தை எதிர்த்து தனது கருத்துக்களை கூறியுள்ளார். அதனால் தான் தங்களிடம் (சுமந்திரனிடம்) நேரடியாகத் தெரிவிக்கின்றேன், என்று பதிவிட்டுள்ளார். (ஒ.5)

# புலிகள் பற்றி சுமந்திரன் வாய்திறக்கவே கூடாது!

## பதவியைப் பறிக்குமாறும் சம்பந்தனுக்கு சாள்ஸ் கடிதம்

மன்னார், மே 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கருத்துக் கூறுவதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார், கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

இது தொடர்பில் கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழரின் இன விடுதலைக்காக அதியுட்ச தியாகங்களைச்செய்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை சுமந்திரன் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றார். இந்தவிடயம் தொடர்பாக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டினேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த விடயம் தொடர்பாக இனிமேல் கதைக்கக் கூடாது என்றும் நான் கோரியிருந்தேன். ஆனால், கடந்த 8ஆம் திகதி சிங்கள ஊடகம் ஒன்றுக்கு சுமந்திரன் வழங்கிய நேர்காணலில், இதேபோன்றதொரு கருத்தைக் கூறியிருக்கின்றார். இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருப்பினும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருக்கின்ற காரணத்தால் தமிழ் மக்கள் கோபமடைந்துள்ளனர். சுமந்திரனின் கருத்தை நானும் எதிர்க்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவியை அவரிடமிருந்து மீளப்பெற்று வேறு நபர்களுக்கு வழங்க வேண்டும். இது தொடர்பாக முடிவெடுப்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டும்படி கேட்டுக்கொள்கின்றேன். என்றுள்ளது. (த-56)

# சுமந்திரனுக்கு எதிராக என்னதான் நடவடிக்கை?

## கூட்டமைப்பின் பங்காளிகளிடம் கேட்கின்றது சிறிரெலோ

வவுனியா, மே 12

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மீது தமிழ் அரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமா? அல்லது கூட்டமைப்பிலிருந்து விலகுமா? என்று சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (சிறிரெலோ)செயலாளர் ப.உதயராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

அவருடைய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சுமந்திரனின் நேர்காணல் காணொலியில் சுமந்திரனின் கருத்துக்கள் ஒட்டுமொத்த ஆயுதப் போராட்டத்தையும் உலக தமிழர்களையும் கொச்சைப்படுத்துவதுபோல் உள்ளது.

இதற்கு தமிழ் அரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமா? அல்லது கூட்டமைப்பிலிருந்து விலகுவார்களா?

விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தியமை தவறான விடயம் என்று சுமந்திரன் நேர்காணலில் கூறியிருக்கின்றார். இது, அவர் விடுதலைப்புலிகள் மீதும் ஒட்டுமொத்த உலக தமிழரின் நம்பிக்கை மீதும் சேற்றை அள்ளி வீசியதுபோல் உள்ளது. இதற்காக சுமந்திரன் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் தமிழர்களிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும். இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுமந்திரன் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார். தேர்தலில் பொதுமக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும். என்றுள்ளது. (த-110)

# மிதவாதத் தலைவர்களும் இயக்கங்களை ஆதரித்தார்கள்

## வரலாறு தெரியாமல் பேசுகிறார் சுமந்திரன் என்கிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், மே 12

தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கு அப்போதிருந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு வழிகளிலும் உதவிகளைச் செய்திருந்தார்கள். 5 வயதிலிருந்து கொழும்பில் வாழ்ந்து வரும் சுமந்திரனுக்கு இது தெரியாமல் இருந்திருக்கலாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவரும். புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசுகளால் தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டபோதுதான் ஆயுதப் போராட்டம் முகிழ்த்தது. தமிழ் மக்களால் சாத்வீக வழியில் போராடிப் பலனில்லை என்ற போதுதான் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளைஞர்கள் அதனை முன்னெடுத்தார்கள்.

மாணவர் பேரவை, இளைஞர் பேரவை என்று ஆரம்பத்தில் அமைப்புக்கள் உருவாகின. பின்னர் ஆயுதப் போராட்டக் குழுக்கள் சில உருவாகின. அவர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதிலே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஆயுதப் போராட்டத்தை கூர்மைப்படுத்தி வலுவான போராட்டமாக மாற்றியமைத்தார். ஆயுதப் போராட்டத்தில் ஆரம்பத்திலிருந்து இருந்தவன் என்ற ரீதியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்தை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.


அவர் தனது 5 வயதிலிருந்து சிங்களவர்களுடன் பழகி வாழ்ந்ததாகச் சொல்லியிருந்தார். அன்றைய காலத்தில் வடக்குக்குத் தமிழ மக்கள் மத்தியில் இருந்த உணர்வு என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கு அன்றைய தலைவர்கள் உதவிகள் செய்தமை எல்லாம் அவருக்கு தெரியாமலிருக்கலாம்- என்றார். (ஒ.5)

வைத்திய கலாநிதி. கோ.றஜீவ்
(பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)

# கொரோனாவுடன் வாழப் பழகுவோம்

பகுதி- 3

## சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது...



### கடைப்பிடிக்க வேண்டியவை

- சிகை அலங்கரிப்பு நிலையத்தில் முடி திருத்துவதற்கும், முடிக்கான சாயம் பூசுவதற்கும் மட்டுமே அனுமதி வழங்கப்படுள்ளது. முகச்சவரம் செய்தலுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே நீங்கள் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குச் செல்லமுன் நேர ஒதுக்கீடு (Appoitnment) செய்த பின் செல்வது நன்று.
- சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு செல்லும் போது வீட்டிலிருந்தே துணியை எடுத்து செல்வது நன்று. அவ்வாறு கொண்டு செல்லாவிடின் துணியின்றி முடி திருத்தம் செய்வது சிறந்தது.
- சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குள் செல்லும் போது வாயிலில் சவர்க்காரமிட்டு கை கழுவியதன் பின் செல்ல வேண்டும் .
- பணியாளர்கள் கட்டாயமாக முகக் கவசம் (face mask), மற்றும் முகத்தடுப்பு (Face Shield) அல்லது பாதுகாப்புக் கண்ணாடி (Goggles) அணிந்திருப்பதனை உறுதி செய்யவேண்டும்.
- சிகை அலங்கரிப்பு நிலையத்தில் அமரும்போது ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளி இருக்கத்தக்க வகையில் அமர வேண்டும். அதிக கூட்டமாக இருப்பின் தவிர்க்க வேண்டும்.
- முடி திருத்தம் செய்யும்போது பின்புறமாகவும் பக்கப் புறமாகவும் இருந்து மட்டும் செயற்பட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஒருபோதும் முகத்துடன் முகம் நோக்கக்கூடியவாறு சேவையை வழங்க அனுமதிக்கவேண்டாம்.
- அனைவரதும் பெயர், வருகை தந்த திகதி, நேரம் மற்றும் தொடர்பு கொள்வதற்கான முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை அங்கு வைக்கப் பட்ட பதிவேடு ஒன்றில் பதியவேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் தங்களுக்கு பயன்படுத்த முன் சரியான முறையில் தொற்று நீக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துங்கள்.

### தவிர்க்க வேண்டியவை

- தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குச் செல்வதனை தவிர்க்கவேண்டும்.
- சிகை அலங்கரிப்பு நிலையங்களிலுள்ள மேற்பரப்புக்களை அநாவசியமாகத் தொடுவதனைத் தவிர்க்கவேண்டும்.

## விற்பனையாளர்களிடமிருந்து அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டியவை



- குடும்பத்தில் ஒருவர் ஆரோக்கியமான இளம் வயதினர் மட்டும் செல்லுங்கள்.
- உங்களுக்கென்ற பையை அல்லது கூடையை எடுத்துச்செல்லுங்கள்.
- உங்கள் முகக் கவசத்தை சரியான முறையில் அணியுங்கள்.
- எப்பொழுதும் ஒரு மீற்றர் தூர இடைவெளியைப் பேணுங்கள்.
- பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு குறைந்த நேரத்தைச் செலவிடுங்கள்.
- பணப்பரிமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எப்போதும் குறித்தளவு பணத்தைச் செலுத்துவதற்கு ஆயத்தமாக பணத்தாள்கள் அல்லது நாணயங்களை வைத்திருங்கள்.
- கொள்வனவு செய்த பொருட்களை முறையாகக் கழுவுங்கள். உதாரணமாக காய்கறிகள் பழங்கள் போன்றவை.
- வீடு திரும்பியவுடன் ஆகக்குறைந்தது 20 வினாடிகளுக்காவது கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள்.
- பாவித்த முகக் கவசங்களைப் பாதுகாப்பான முறையில் மூடக்கூடிய குப்பைத்தொட்டி ஒன்றினுள் அப்புறப்படுத்துங்கள்.

### தவிர்க்கப்பட வேண்டியவை

- உங்கள் மூக்கு, வாய் மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- பொருட்களை அநாவசியமாகத் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வெளியே செல்ல வேண்டாம்.
- சிறுவர்கள், 65 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

(தொடரும்)

# மின்சாரம், நீர்க் கட்டணம் செலுத்த 30 நாள் அவகாசம்

## துண்டிப்பு இல்லை என்கிறது அரசு

கொழும்பு, மே 12

மின்சாரக் கட்டணம் மற்றும் நீர்க்கட்டணங்களைச் செலுத்துவதற்கான நிவாரண காலமொன்றைப் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இரண்டு மாதங்களுக்கான மின்கட்டணப் பட்டியல் ஒரே நேரத்தில் கிடைக்குமாயின் ஒரு மின் கட்டணப் பட்டியலைச் செலுத்த 30 நாட்கள் கால அவகாசம் பெற்றுக்கொடுக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஆயினும் தற்போது மின்சார சபைக்குக் கிடைக்கும் வருவாய் மிகக் குறைவடைந்துள்ளதால் வழங்கப்பட்டுள்ள நிவாரண காலத்துள் மின் கட்டணங்களைச் செலுத்த பாவனையாளர்கள் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேபோன்று நீர்க்கட்டணப்பட்டியல்கள் ஒரே தடவையில் கிடைத்திருப்பின் ஒரு கட்டணப் பட்டியலைச் செலுத்த 30 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்று நீர்வழங்கல் சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார். எவ்வாறாயினும் நீர் வழங்கல் துண்டிப்பு செய்யப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறினார். (எ-22)

# பொலிஸைத் தாக்கியவர் போன் மூலம் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், மே 12

மானிப்பாயில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டவரை அவருடைய அலைபேசியின் பரிவர்த்தனைச் சமிக்ஞையை அடிப்படையாகக் கொண்டு அவர் மறைந்திருந்த இடத்தைக் கண்டறிந்து கைது செய்தனர் பொலிஸார்.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்துக்குள் குறித்த நபர் மறைந்து இருக்கிறார் என்பதைப் பொலிஸார் பரிவர்த்தனைச் சமிக்ஞை மூலம் கண்டுபிடித்தனர்.

அதனையடுத்து குறித்த கடைக் கட்டத்தை அதிரடியாக வந்த சுமார் 30 பொலிஸார் நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.

இதன்போது எதிரே இருந்த வர்த்தக நிலையத்தில் பணியில் இருந்த இன்னொருவர் பொலிஸார் முற்றுகையிட்டதை அவதானித்துவிட்டு, சந்தேகநபருக்கு அழைப்பெடுத்து தகவலைச் சொல்லி எச்சரிக்கை செய்துள்ளார்.

ஆயினும் அடுத்த நிமிடமே கடைக்குள் புகுந்து தேடப்பட்ட நபரைக் கைதுசெய்த பொலிஸார், தகவல் வழங்கிய வர்த்தக நிலையத்திலிருந்த வரையும் உடனேயே கைதுசெய்தனர்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் தகவல் வழங்கியவரை விடுவித்த பொலிஸார், மானிப்பாய் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (த. 105)

# பாடசாலை ஆரம்பிக்க ஒருமாதகாலமாகலாம்!

இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காகப்பாடசாலைகளைமீண்டும்ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு மாத கால மாகலாம்என்றுகல்விஅமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சுகாதாரஅதிகாரிகளின்பரிந்துரையின் அடிப்படையிலேயே பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்.

மாணவர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டநாளில்பாடசாலைகள் திறக்கப்படும். பாடசாலை நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும்.

இந்தத் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் கிருமி நீக்கம்செய்யப்பட்டுஅதன்பின்னர் சாதாரண தர, உயர் தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளும், பிற வகுப்புக்களும் ஆரம்பமாகும்- என்றார். (எ)



## புலிகளின்...

குள் விடுதலைப்புலிகளின் சீருடைகள் உட்பட, ஆவணங்கள் சில காணப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் நான்கு சீருடைகளும் அவற்றுக்கான தொப்பிகளுடன் பெண் போராளிகள் பயன்படுத்தும் இடுப்பு பட்டி மற்றும் சிவில் உடைகள் சிலவற்றுடன் ஒளிப்பட கொப்பி, ஒலிப்பதிவு கெசட் ஒன்று, நான்கு ஒளிப்பட அல்பங்கள் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

போர் நடைபெற்ற காலத்தின்போது விடுதலைப்புலிகளால் இவை புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். மீட்கப்பட்ட அனைத்து பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

## கொரோனா...

யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும் 16 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 13 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் கடற்படையின் உறவினர் எனவும், ஏனைய 2 பேரும் அண்மையில் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரைக்கும் நேற்று வரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படவில்லை. (எ-22)

## மருத்துவபீட...

என்று பொலிஸ் சைபர் குற்றவியல் விசாரணையுடன் இணைந்த இணைய பாதுகாப்புக்கான தேசிய மையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசுவாமி மற்றும் மருத்துவபீட பதில் பீடாதிபதி ஆகியோர் இணைந்து நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இதுதொடர்பான முறைப்பாட்டின் பிரதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கோரோனா தொற்று அறிகுறிகளுடன் உள்ளோர் மற்றும் சுய, நிறுவன தனிமைப்படுத்தப்பட்டோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கடந்த ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து இடம்பெற்று வருகின்றது. அங்கு பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து பல்வேறு அநாமதேய எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. அது வெற்றியளிக்காது போக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ள போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாமையால் தொற்று அபாயம் உள்ளது என்று உண்மைக்கு மாறான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

அத்தகைய வதந்திகளைப் பரப்பிய ஊடகங்கள் மற்றும் அதற்கு தூண்டுதலாக இருந்தோர்தொடர்பில்விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியே பொலிஸ் சைபர் குற்றவியல் விசாரணையுடன் இணைந்த இணைய பாதுகாப்புக்கான தேசிய மையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (எ)


அகவை அறுபதில் அகமகிழ்ந்து அதிபரை வாழ்த்துகின்றோம்



கல்வியில் 32 வருடகாலம் கலங்கரை விளக்கு...
திரு.சரவணை கிருஷ்ணன் (SLPS III)
20 வருட காலம் ஆசிரிய அனுபவத்தினால் 12 வருட காலம் எமது பாடசாலையில் அதிபராக பௌதீகவள மற்றும் கல்வி அபிவிருத்தியில் பெரும் பங்காற்றி ஓய்வு பெறும் அதிபரை இறையாசியுடன் சகல நலன்களும் பெற வாழ்த்துகின்றோம்.

சேவை விவரம்
- ஆசிரியர் SLTS-I
- யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் (28.11.1989-02.02.1993). (01.01.1995 - 08.10.2008)
- ஆசிரியர் பயிற்சி கலாசாலை கோப்பாய் (03.02.1993 - 31.12.1994)
- அதிபர் SLPS-III
- யா/மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (09.10.2008 - 11.05.2020)

Best Wishes
பழைய மாணவர் சங்கம்
யா/மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைச் சமூகம்


பைவர் கிளாஸ் தொழிலகம்
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்
வேம்பிராய் வீதி.
தொடர்பு: 076 883 7047

மாபிள் வேலை
உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். சதுர அடி 45\=
தொடர்பு: 077 334 1281

தவறிவிட்டது
செ.சுதாகர் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, ATM காட், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், பணம் அடங்கிய பேர்ஸ் கைதடிக்கும் மிருசுவிலுக்கு மிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 077 665 6006 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)

விற்பனைக்கு
கட்டைப்பிராய் சந்தி, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் கடை ஒன்றில் உள்ள ஹாட்வெயார் பொருள்கள் மற்றும் மல்டிலெக் பெயின்ட் பொருள்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்கள் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.
தொடர்பு:
075 237 7431, 076 846 1933


## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியர் திருமதி மரிய சுவர்ணா ஆபிரகாம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**இராசேந்திரம் இம்மானுவேல்**

கடந்த 07.05.2020 அன்று காலமானார்.
அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
கைதடி, நாவற்குழி.

## மரண அறிவித்தல்



**அப்பையா சந்திரசேகரம்**

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடா Toronto ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சந்திரசேகரம் கடந்த (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் பாசமிகு கணவரும், தியாகலிங்கம், சந்திரகுமார், ஜெயகுமார், உதயகுமார், நிரஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ONL045GO, Canada இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகேசு குடும்பம்
(பபா சகோதரி)

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 10 . 1928



இறப்பு
04 . 05 . 2020

**மாணிக்கம் தனபாலசிங்கம்**

அரசடி வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் தனபாலசிங்கம் கடந்த (04.05.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற இராசரத்தினம்-தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா (D.R.O), சந்திராதித்தன் (துபாலதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரவதனி, வினோதினி, இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார், சிவகாமி ஆகியோரின் மாமனாரும், மனோரஞ்சிதம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராசநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனரும் விதுஜா, லக்சுஜன், கஜானி, தேனுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (04.05.2020) அன்று அவருடைய சுய விருப்பத்திற்கு அமைவாக யாழ். மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக் கப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அரசடி சந்தி, வடலியடைப்பு. குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

குத்தரசி விற்பனைக்கு 1kg 80\=
**021 222 2846, 076 430 9175**
யாழ். பிரதான வீதி.

## தேவை

பில்கிளாக், பொதியிடல், மாவறுத்தல், உதவியாளர் என்பவற்றுக்கு பெண் ஊழியர்கள் தேவை.
தொடர்பு- **பிருந்தா மில்ஸ் 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.** **077 174 6101**

# மரண அறிவித்தல்



## தேவசகாயம் சந்தியோகு வில்சன்

மன்னாரைப் பிறப்பிடமாகவும் உடுவில் மற்றும் முகமாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் சந்தியோகு வில்சன் நேற்று (11.05.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் கிளாரம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா திரேசம்மா தம்பதியரின் மருமகனும், ஞானமலரின் அன்பு கணவரும், வினில்ட்டா (U.K), றொய்சன் (U.K), அஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றமேஸ் (U.K) இன் மாமனாரும், பிராங்கிளின் (U.K), பிரான்சின் (U.K) ஆகியோரின் பேரனும், குயின்பேவி, காலஞ்சென்றவர்களான செபராசா, தபராசா ஆகியோரின் சகோதரரும், புஸ்பராணி, இராசேந்திரம் (இத்தாலி), அருட்சகோதரி எலுசபெத் (செபமாலைக் கன்னியர் மடம்), செபமாலையம்மா (பிரான்ஸ்), ஞானப்பிரகாசம் (ஓய்வுநிலை அதிபர்) அன்ரன் றமேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (12.05.2020) செவ்வாய்க்கிழமை பங்குத்தந்தையின் ஆசீருடன் இத்தாவில் சேமக்காலையில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முகமாலை தெற்கு,**
**பளை.**

**தகவல்: ச.ஞானமலர்**
**(மனைவி)**

# மரண அறிவித்தல்

**பிறப்பு**
**26 • 01 • 1945**



**இறப்பு**
**06 • 05 • 2020**

## சண்முகம் குமாரவேலு

### (முன்னாள் காயத்திரி கடை உரிமையாளர்-Paris)

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, கொழும்பு, பரிஸ், லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் குமாரவேலு கடந்த (06.05.2020) புதன்கிழமை லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் அரசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், அனுஷா, அனுரா, தனுஷா, வினுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிந்திரகுமார், சுரேஷன், பகிரதன், ரம்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான தவமணி, ராசலிங்கம் மற்றும் பத்மநாதன், சாவித்திரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரிஷாந், அஜந்த், பிரவீன், அஷ்வின், நவீன், தேஜா, விதுன், பிரஜெய், கிறிஸ்டன், செரினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**117/5, கண்மணி லேன், கந்தர்மடம்.**
**077 985 6769**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பாடசாலைகள் ஆரம்பித்தாலும் எந்த நிகழ்வும் நடத்தக்கூடாது

கொடிகாமம் மே 12

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் கூட்டங்கள், கண்காட்சிகள், விளையாட்டு நிகழ்வுகள் உள்ளிட்ட எந்தப் பொது நிகழ்வுகளும் நடத்தப்படக்கூடாது என்று கல்வி அமைச்சு அறிக்கை மூலமாக அறிவுறுத்தியுள்ளது.

பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய முறைமை குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள வழிகாட்டல் கையேட்டில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.


சமூக இடைவெளி, சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே தவிர்க்கமுடியாத கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஒவ்வொரு பாடசாலையிலும் நுழைவாயிலில் ஒரு பரிசோதகர் இருத்தல் வேண்டும்.
2. சந்தேகத்துக்கிடமான அறிகுறிகள் உள்ள ஒருவர் கண்டறியப்பட்டால், அந்த நபர் வீட்டுக்கு அல்லது சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அனுப்பப்படுவார்.
3. பெற்றோர் பாடசாலை வாசல்களில் கூடியிருக்கக்கூடாது.
4. பாடசாலைக்குள் நுழைவது தொடக்கம் வீடுதிரும்பும் வரை அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும்.
5. பாடசாலை நுழைவாயிலில் கை கழுவுவதற்கான வசதிகள் வழங்கப்படவேண்டும்.
6. பாடசாலை நேரத்துக்கு முன்பே கட்டடங்கள், வகுப்பறைகள், படிக்கட்டுகள் தினமும் சுத்தம்செய்து கிருமிநீக்கம் செய்யப்பட வேண்டும்.
7. வாயில் கதவுகளை முடிந்தவரை திறந்து வைத்திருப்பது நல்லது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கைகளுக்கும் கதவுகளுக்குமான தொடுகையைக் குறைக்க உதவும் என்றும் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளது.

(த-159)

# வெட்டிய குழியிலிருந்து வெளிவந்த மனித எச்சம்



கொழும்பு,மே 12

மலசலகூடத்துக்காக குழி ஒன்றை வெட்டியபோது, பழமையானமனித எச்சம் எனக் கருதக்கூடிய எலும்புத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருநாகல், தம்புள்ள பிரதான பாதையில் தோரயாய, நாரம்பனாவ என்ற இடத்தில் காணி உரிமையாளர் ஒருவர் மலசலகூடத்துக்காக குழி ஒன்றை வெட்டும் போது, சுண்ணாம்புப் பாறை வடிவில் ஒரு படிவு காணப்பட்டுள்ளது. அதில் மனித முள்ளந்தண்டுடன் தொடர்புபட்டதாகச் சந்தேகிக்கூடிய ஒரு பகுதி தெரிந்துள்ளது.

அதில் கண்டெடுக்கப்பட்ட சிதைவுகளை ஒன்று சேர்க்கும் போது மனித உருவத்தை ஒத்த அமைப்புக் காணப்படுவதாக காணி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொல்பொருள் ஆராயச்சிப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். புதைகுழி எனச் சந்தேகிக்கும் பிரதேசம் சுமார் 7 அடி நீளமும் 4 அடி அகலமுள்ள உள்ளதாகக்காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

(க)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் சுரேந்திரன்

314, நாவலர் வீதியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சுரேந்திரன் கடந்த (13.04.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சரஸ்வதி தம்பதியரின் மூத்த மகனும், சசிபீராவின் கணவரும், ஆர்த்திகாவின் தந்தையும், ஜெயலக்சுமி, கிரிசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுசீந்திரனின் அன்பு மைத்துனரும், சாயீசாவின் அன்பு மாமனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தர்மேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற நிர்மலன் மற்றும் நிரஞ்சன், மேகலா, உமா, உஷா, ராகவன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2020) செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00 மணிக்கு லண்டனில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**314, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: பா.ராகவன்**
**077 481 5336**



# இரணைமடுவிலிருந்து 175 பேர் வீடுகளுக்கு

கிளிநொச்சி, மே 12
இரணைமடு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 175 பேர் வீடுகளுக்கு நேற்று திங்கட்கிழமை அனுப்பப்பட்டனர்.
கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் இருந்து அழைத்து வரப்பட்டு, தனிமைப்படுத்தலுக்காக இரணைமடு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.
தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்களுக்கு பரிசோதனை அறிக்கையில் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தியதை அடுத்து அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி குறூப் கப்டன் றொகான் பத்திரண தலைமையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.
விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமுக்கு வருகை தந்த நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஆரோக்கியமான குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார். அவர் தனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.
அதேபோன்று விமானப்படைத் தனிமைப்படுத்தல் நிலையத்தின் விமானப்படை வைத்தியர் ஒருவருக்கு சிறுமி ஒருவர் பூச்செண்டு வழங்கி நன்றி தெரிவித்தார்.
இரணைமடு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து இரண்டாவது கட்டமாக 175 பேரில் 72 ஆண்களும், 78 பெண்களும் 25 சிறுவர்களும் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-214)

# ஜூன் மாதம் முதல் மீள விமான சேவை!

கொழும்பு, மே 12
எதிர்வரும் ஜூன் மாதம் முதல் இலங்கைக்கான விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது
நாட்டுக்குள் நுழையும் சகல பயணிகளையும் பரிசோதனை செய்யும் சிறப்பு வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயப்படுகின்றது.
விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ள காரணத்தால் நாட்டுக்குக் கிடைக்க விருந்த மிகப் பெரிய வருமானம் இல்லாது போயுள்ளது. முக்கியமாகச் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளது.
தற்போது நாட்டை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரப்படும் தீர்மானம் அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரக் காரணிகளை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது.
மீண்டும் விமான சேவைகளை முன்னெடுப்பது தொடர்பாக அரசு சுகாதார அதிகாரிகளுடன் பேசி ஒரு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. அதற்கான விதத்தில் இப்போதிருந்து விமானங்களின் பராமரிப்பு மற்றும் பயணிகளைக் கண்காணிக்கும் மருத்துவ இயந்திரங்களைப் பொருத்துவது குறித்தெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
இலங்கை வரும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் இலங்கைப் பயணிகள் அதேபோல் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகள் எனச் சகலருக்கும் மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும், விமானப் பயணங்களில் சில சில மாற்று நேர அட்டவணைகளைக் கையாளவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)



# 24 மணி நேரத்தில் 799 பேர் கைது

கொழும்பு, மே 12
பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 799 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த காலப் பகுதியில் 206 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
அதேவேளை, மார்ச் 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் மொத்தமாக 51 ஆயிரத்து 552 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் 13 ஆயிரத்து 350 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)


## அகவை அறுபது காணும் மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்

யா / மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலை அதிபராக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி

11.05.2020 இல் ஓய்வு பெறும்

## திரு. சரவணை கிருஷ்ணன்

Sp.Trained - Primary Edu. SLPS - III



திரு. ந. கிருபாகரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

**வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் மணிவிழா வாழ்த்துச்செய்தி**

யா / மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை அதிபர் திரு.சரவணை கிருஷ்ணன் அவர்கள் தனது சேவையினின்றும் ஓய்வுபெறும் இத்தருணத்தில் அவருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்சியடைகின்றேன்.

எமது தென்மராட்சி கல்வி வலயத்தில் இருக்கின்ற ஆரம்பப்பிரிவு பாடசாலைகளில் மிகவும் சிறப்பான முறையில் இயங்கிவரும் பாடசாலைகளில் ஒன்றான யா / மட்டுவில் வடக்கு அ. த. க. பாடசாலையின் அதிபர் திரு. ச. கிருஷ்ணன் அவர்கள் தனது சேவையின் மீதும், பாடசாலை நிர்வாகத்தின் மீதும் மிகுந்த கரிசனை கொண்டவர். பாடசாலைக்கு சமூகத்தினால் கிடைக்கக்கூடிய பல்வேறு அனுகூலங்களை நல்லதொரு தொடர்பாடல்திறன் மூலம் பெற்றுக்கொண்டவர். பாடசாலைக்கும் சமூகத்திற்குமான நல்லதொரு உறவினை ஏற்படுத்தி சிறந்த முறையில் பாடசாலையின் நிர்வாகத்தினை நடாத்தியவர். மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளையும் சிறப்பாக முன்னெடுத்த ஓர் அதிபராவார். எம்மால் வழங்கப்படுகின்ற பல்வேறு பணிகளை உரிய காலத்தில் சிறப்பான முறையில் நிறைவேற்றும் ஆளுமை கொண்டவர். அவரது அதிபர் சேவையில் வருடாவருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களை சிறந்தமுறையில் சித்திபெறவைத்து நல்லதொரு பெறுபேற்றினை எமக்கு வழங்கிவருபவர். யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் அவர் ஆசிரியராக இருந்தபொழுது நீண்டகாலமாக சிறப்பான ஆசிரியப்பணியாற்றி பல மாணவச்செல்வங்களின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்தவரென்பதையும் கல்வியைப்போன்று மாணவர்களின் விளையாட்டுத்திறன் விருத்திக்கும் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர் என்பதையும் நான் அறிகின்றேன். மேலும் அவர் தென்ராட்சி மண்ணிலே பிறந்து தென்மராட்சி கல்விவலய பாடசாலையில் கற்று தென்மராட்சியிலேயே தனது 32 வருடகால கல்விப்பணியை ஆற்றி இன்று அவர் ஓய்வு பெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அவரது ஓய்வு காலம் சிறக்கவும் வளம்பெறவும் எனது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.



### சேவை விபரம்

ஆசிரியர் சேவை
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
(28.11.1989 - 02.02.1993)
ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - கோப்பாய்
(03.02.1993 - 31.12.1994)
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
(01.01.1995 - 08.10.2008)
அதிபர் சேவை
யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை
(09.10.2008 - 11.05.2020)

ஏற்றி விட்ட ஏணியாக .......
நம் அனைவருக்கும் ..........

பூமாதேவியின் இறைஞ்சலால்
நல்லோரை காத்திட
வாசுதேவர் தேவகி தம்பதி வயிற்றில்
பெருமாள் எடுத்த 9 வது அவதாரமே
கிருஷ்ண அவதாரம்,

மட்டுவில் தாயின் இறைஞ்சலால்
நம் கல்வியை காத்திட
சரவணை குஞ்சுப்பிள்ளை தம்பதி வயிற்றில்
இறைவன் அருளிய 6 வது வரமே
எம் கிருஷ்ணன் அவதாரம்,

உன் உதிப்பின் கவனத்தில்
நாமத்தில் உள்ள இறைவன் போல்
வளர்மதி எனும் கல்வி கோவிலின்
மூலஸ்தான பூசாரியாய்
உன் உண்மையின் நிழலில்
நமக்கெல்லாம் குருவானாய்,

புண்ணியம் இனிக்கும் நற் பண்பின் மிக்கோய்
கண்ணியம் கடமை பேணும் கவின் அதிபர் நீரே
சிங்கம்போல் குரல் எடுத்து சிறப்புற கல்வி ஓச்சி
தங்கம்போல் மனத்திடை கொள்வார் கல்வி
சமூக கல்வியில் உனக்கு ஈடு இணை இல்லை யாரும்
சமூக ஒழுக்கத்தில் கடமை பேணி வழுவில்லா பண்பாளனாகி
வள்ளுவம் ஒத்தாய் உன் வானுயர்ந்த சேவையால்
சொல்லவும் மறவோம் ஐயா பழுதிலா நின் சேவையை

ஏறியவன் எங்கோ மேலிருக்க
ஏற்றி விட்ட ஏணி மட்டும்
அதே இடத்தில் அடுத்தவனை
ஏற்றிவிட காத்திருப்பது போல்

32 வருட ஆசிரிய தவம் நிறைவில்
அரச தொழிலுக்கே ஓய்வு
எம் சமூக கடிகாரமே உனக்கேது ஓய்வு
உங்கள் காத்திருப்பும் வீற்றிருப்பும்
என்றும் தேவை எம் மட்டுவிலுக்கு.
வாழ்க வளமுடன்...

வாழும் வரை வாழ்த்தும்
பழைய மாணவ மாணவிகள்
தென்மராட்சி

# கொரோனா முடிந்த பிற்பாடு உலகளவில் பஞ்சம் ஏற்படும்!

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்




வொஷிங்டன், மே 12


**கொரோனா முடிவுக்கு வந்த பின்னர் பல நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். இதனால் பல நாடுகளில் பஞ்சம் தலைவிரித்தாடும் என்று எச்சரித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.**

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உலகளவில் பல நாடுகள் தற்போது ஊரடங்கு உத்தரவைப் பின்பற்றுகின்றன. இதனால் உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளன. உணவுப் பற்றாக்குறை தற்போதே பல நாடுகளில் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் கொரோனாவின் பின்னான உலக நிலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்ததாவது:

கொரோனா முடிவுக்கு வந்ததும் பல நாடுகளும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்படும். இந்த ஆண்டு இறுதியில் இதன் நிலைமை மோசமாகும். 26 கோடி மக்கள் பசி, பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். முதலில் அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதைச் சரி செய்வதற்கு பணக்கார நாடுகளும், பணக்காரரும், பண வசதி கொண்ட நிறுவனங்களும் தாராளமாக உதவ வேண்டும்.

கொரோனா தொற்றின் உச்சம் இன்னும் 3 முதல் 6 மாதங்களுக்கு நீடிக்கலாம். அப்போது ஏழ்மையான நாடுகளும் கடும் பாதிப்புக்கு ஆளாகும். ஏற்கனவே கொரோனாவால் மக்களுக்கு வருமானம் இல்லை. வேலைவாய்ப்பு குறைந்துவிட்டது. உற்பத்தியும் இல்லை. ஏற்றுமதி வருவாய், பணம் அனுப்புதல், சுற்றுலா ஆகியவை முடங்கிவிட்டன. சுகாதார அமைப்புகளும் அழுத்தத்தில் இருக்கின்றன.

இதுபோன்ற பிரச்சினைகளால் மக்களுக்குள் மோதல் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது. பசி, பஞ்சம், வறுமை, நோய் அதிகரிப்பு போன்றவை ஏற்படும். சாலைப் போக்குவரத்து தடைகளால் பொருளாதார மந்த நிலை இன்னும் மோசமாகும். இது உலக அளவில் விநியோக சங்கிலியை முறித்துவிடும். பசி, பட்டினி போன்றவற்றால் மக்களிடையே மோதல் ஏற்பட்டு அது கொந்தளிப்புகளையும் உருவாக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அது கட்டுப்படுத்த முடியாத நிலைக்கும் செல்லலாம் என்றுள்ளது. (ம)



## ஆப்கானிஸ்தான் அமைச்சருக்கும் கொரோனா!

காபுல், மே 12

ஆப்கானிஸ்தான் நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் பெரோசுகிதீன் பெரோஸ் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். இதை சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் கொரோனாவுக்கு 109 பேர் பலியாகி உள்ளனர். 3 ஆயிரத்து 700க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அந்த நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் பெரோசுகிதீன் பெரோஸ் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளார். இதை சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம)




## இவன்காவின் உதவியாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

வொஷிங்டன், மே 12

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மகளும், வெள்ளை மாளிகையின் ஆலோசகருமான இவன்காவின் உதவியாளருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக ட்ரம்பின் பாதுகாப்புப் படைச்சிப்பாய் ஒருவருக்கும், அமெரிக்கத் துணை அதிபர் பென்ஸின் உதவியாளருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து ட்ரம்பும், பென்ஸும் தினமும் கொரோனா சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே இவன்காவின் உதவியாளருக்கும் கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## கொரோனா பலிகளை குறைத்தது அமெரிக்கா



வொஷிங்டன், மே 12

கொரோனாவால் கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 1,750 பேர் உயிரிழந்துகொண்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் அங்கு 750 பேர் மட்டுமே உயிரிழந்தனர். கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காதான் முதலிடத்தில் உள்ளது. அங்கு சுமார் 14 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 81 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 1,750 பேர் உயிரிழந்துகொண்டிருந்தனர். உச்சக்கட்டமாக ஒரே நாளில் 3,000 பேர் உயிரிழந்த நாள்களும் உள்ளன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு 750 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர். (ம)

**கருங்கல் சல்லி விற்பனைக்கு**

டஸ், 3/4 inc, சிப்ஸ், 6x9 போன்ற கருங்கல் (3 கீப்) யாழ் மாவட்டத்துக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு

**076 826 7697**



இரண்டாம் உலகப் போரின் 75ஆவது வெற்றிவிழாவை ரஷ்யா கடந்த சனிக்கிழமை கொண்டாடியுள்ளது. மக்கள் கூட்டம் இல்லாமல் இந்த விழா முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம)

## கொரோனா பரவியதில் வுகான் சந்தைக்கு முக்கிய பங்குண்டு

### உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

வுகான், மே 12

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியதில் வுகான் சந்தைக்கு முக்கிய பங்குள்ளது என்று ஆதார பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளோம் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவியதில் வுகான் சந்தைக்கு குறிப்பிடத்தக்க பங்கு இருப்பது தெளிவாகிறது.

ஆனால் எந்த அளவுக்கு அதன் பங்களிப்பு இருக்கும் என்பது தெரியவில்லை. அந்த சந்தை, வைரஸின் மூலமாக இருந்ததா அல்லது அங்கிருந்து பரவியதா அல்லது தற்செயலாக சந்தைப்பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதா என்பது தெரியவில்லை. இதைத் தீர்மானிக்க கூடுதல் ஆய்வு தேவை. இத்தகைய சந்தைகள் பல லட்சம் மக்களுக்கு உணவு மற்றும் வாழ்வாதாரங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

சில நேரங்களில் இந்தச் சந்தைகளால் மனிதர்களுக்குத் தொற்று நோய் பரவும். ஆனாலும், அவற்றை சட்டவிரோதமாக்கி தடைசெய்வதை விட அவற்றை மேம்படுத்துவதில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். விலங்குகளை மனிதர்களின் நேரடி தொடர்பில் இருந்து பிரித்து வைப்பது உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் உணவு, பாதுகாப்பு தரங்களை மேம்படுத்துவதன்மூலம், மக்கள் அதிகம் கூடும் நெரிசலான சந்தைகளில், விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுவதற்கான அபாயத்தைக் குறைக்க முடியும்.

கொரோனா வைரஸ் விலங்கில் இருந்து பரவியதா? என்பதை தீர்மானிக்க விரிவான ஆய்வுகள் தேவை. இதுதொடர்பான ஆய்வில் உலக சுகாதார அமைப்பையோ, பிற வெளிநாட்டு நிபுணர்களையோ சீனா இன்னும் அழைக்கவில்லை - என்றுள்ளது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.